திராவிடன்

ஆசிரியர்:என்.வி.நடராசன்.

மாலை : 9 2—12—55 : வெள்ளி : விலை 3 அணு மலர் : 16

புல்கானின்-குருசெவ்

திராவிடத்தில் சுற்றுப் பயணம்

- சென்னை நகர சபை நினைவூட்டிய தமிழகத்தின் பெருமை
- நேரு சர்க்காரின் தாக்கீது மண்ணைக் கவ்வியது.
- காமராசருக்கு கிராமபோன் !
- கவர்னர் பிரகாசாவுக்கு ஒலிப்பதிவுக் கருவி !!

ருஷ்ய நாட்டுத் தலைவர்களான பிரதமர் புல்கானின், குருசெவ் ஆகியோர் தங்கள் குழுவினருடன் திராவிடத்தில் சுற்றுப் பயணம் செய்து திரும்பிச் சென்றனர். இத்தலைவர்களை வரவேற்க சென்னை, கோவை, பெங்களூர் நீலகிரி ஆகிய இடங்களில் நகர சபையினரும், அரசினரும் தக்க. ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். அதற்கேற்ப லட்சக் கணக்கான மக்கள் ஆங்காங்கு சோவியத் தலைவர்களை வரவேற்கவும் அவர்களின் கருத்தினைக் கேட்கவும் திரண்டிருந்ததைக் கண்டு புல்கானின்—குருசெவ் ஆகிய இருவரும் திகைத்து விட்டனர் எனக் கூறப்படுகிற தென்றால் திராவிடம் அவர்களுக் களித்திருக்கும் மகத்தான வரவேற்பினை மேலும் விவரிக்கத் தேவையில்லை யென்றே கருதுகிறோம்.

பெங்களூரில்—சோவியத் தலைவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப் பட்டிருக்கிறது. ருஷ்யப் பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் குருசெவ் அவர்கள் வரவேற்புக்கு பதில் அளித்துப் பேசுகையில் "போர் வெறியர்களின் ஆதிக்கத்தைத் தீர்த்துக்கட்ட ஆயுத பலத்தால்தான் முடியும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அத்தகைய நடவடிக்கைகளில் சோவியத் சர்க்கார் தீவிரமாக ஈடுபடும்" என்று அமெரிக்காவை மறைமுகமாக மிரட்டி யிருக்கிறார். அதுமட்டுமல்லாமல், அண்மையில் வெடிக்கப்பட்ட ரஷ்ய அணு ஆயுதத்தின் பயங்கரத்தையும் விவரித்திருக்கிறார் !

கோவையிலும்—நகர சபையினர் சோவியத் தலைவர்களுக்கு, அளித்த வரவேற்பினை நம் தாய் மொழியாம். தமிழ் மொழியிலேயே அச்சிட்டுத் தந்துள்ளனர்.

கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சோவியத் பிரதமர் புல்கானின், இந்தியில் பேசினாராம் ! "ஹிந்த் ருஷ்யா பாய் பாய்" என்று கூறினாராம்! கோவைப் பொது மக்கள் இதற்கு பதிலாக தங்களின் ஆரவாரத்தைக் காட்ட வில்லையாம் ! பிறகு அதைத் தமிழில். ஒருவர் மொழி பெயர்த்துச் சொன்னதும் பொது மக்களும் தங்களின் அளவு கடந்த அன்பின் வார்த்தைகளைப் பதிலுக்கு தெரிவித்தனராம்!

இந்தி மொழி—தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்த முற்படுவது எவ்வளவு வடிகட்டிய பாசிஸப் போக்காகும் என்பதை இது சமயமாகிலும் டெல்லி ஆதிக்க பீடம் உணரும் என்று நம்புகிறோம்,

தமிழகத்தின் தலைநகரில்—சோவியத தலைவர்கள் 28-11-55 அன்று சென்னை நகருக்கு வருகை தந்தனர். விமானக் கூடத்திலும், மாலை நடை பெற்ற மாபெரும் கூட்டத்திலும் இணையற்ற வரவேற்பினைச் சென்னைப் பொது மக்கள் அளித்தனர். சென்னை நகரம் இதுவரை கண்டிராத வகையில் எழிலுடன் விளங்கியது.

சென்னை நகர சபையின் சார்பில் மேயர் எம். எ. சிதம்பரம் அவர்கள் தமிழில் வரவேற்பினை வாசித்தளித்த போது திரண்டிருந்த பத்து லட்சம் மக்களும் காட்டிய ஆர்வத்தையும் உணர்ச்சியையும் அளவிட்டுக் கூற முடியாது.

" இந்தி அல்லது ரஷ்ய மொழியில்தான் சோவியத் தலைவர்களுக்கு வரவேற்பிதழ்கள் அச்சிட்டுத் தர வேண்டும் என்று மிரட்டி அனுப்பியிருந்த டல்லி தேவதைகளின் தாக்கீது அடியோடு மண்ணைக் கவ்வியது

வாழ்க-டாக்டர் பி. வரதராசலு அவர்கள் எம்.எல்.எ.,

[விவரம்—உள்ளே செல்க]

என்பதனை அறிந்த பொதுமக்கள், தங்களின் உள்ள எழுச்சியை எடுத்துக் காட்டிய அங்கிகழ்ச்சி, மொழிப் பிரச்னையில் மட்டுமல்ல அரசியலிலும் பொருளாதாரத் துறையிலும், வடநாட்டு ஆதிக்கத்தின் பிடிப்புகளைத் தகர்த்தெறிவோம்" என்று எச்சரிப்பதைப் போலவே யிருந்தது.

அது மட்டுமல்ல—மேயர் சிதம்பரம் அவர்கள் சோவியத் தலைவர்களை வரவேற்கும்போது ருஷ்ய நாட்டுத் தலைவர்களே — **பொதுவுடமைக் கொள்கை உங்கள் நாட்டில் மலர்ந்துள்ளதை மனமார வரவேற்கிறோம். ஆனால் அப் பொதுவுடமைக் கொள்கையினை உலகிற்கு முதன் முதலாக அளித்தவர் எங்கள் தமிழ் நாட்டுப் பேரறிஞர் வள்ளுவரே யாகும்.**

திருவள்ளுவர் தமது திருக்குறளில் —பொதுவுடமைக் கொள்கையினை அன்றே—உலகில் எவருமே இக் கொள்கையைப் பற்றி பேசாத — சிந்திக்காத நாளிலேயே-முதன் முதலாக எடுத்துக் கூறியவர் எங்கள் நாட்டு வள்ளுவரே யாகும். ஆதலால்தான் " வள்ளுவர் தன்னை உலகினிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பெருமைப் படுததப்பட்டிருக்கிறது எங்கள் நாடு. அக் கொள்கை எங்கள் நாட்டில் வளராமலிருக்கலாம். எனினும் அப் பொதுவுடமைக் கொள்கை எங்கள்

நக்கீரன்

நாட்டின் சூழ்நிலைக் கேற்ப வளருவதற்கு இந்நாட்டு மக்கள் அனைவருமே மனமார விரும்புகின்றனர் — பணியாற்றுகின்றனர் என்று குறிப்பிட்டாராம்.

ருஷ்யப் பிரதமர் புல்கானின் வரவேற்புக்கு பதில் அளிக்கையில், "இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டதை நாங்கள் உணருகிறோம், சுதந்திரம் பெறுவது அவ்வளவு கடினமல்ல, ஆனால் அந்தச் சுதந்திரம் காப்பாற்றப்படும் விதத்தில் தான் பெற்ற சுதந்திரத்தின் தன்மை விளங்க முடியும் இந்தியாவைப் பொருத்த மட்டில், சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றமடைய வேண்டுவது மிக முக்கியம் என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்" என்று பேசியிருக்கிறார்.

மற்றும் சோவியத் தலைவர்களை மகாபலிபுரம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்ல அரசினர் திட்டமிட்டிருந்தனராம்! ஆனால் அத்தலைவர்கள். தொழில் துறை சம்பந்தப்பட்ட இடங்களை மட்டுமே தாங்கள் காண விரும்புவதாகவும் மற்ற இடங்களைப் பார்வையிட்டு, தங்கள் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை யென்றும் தெரிவித்துவிடவே, மகாபலிபுரம்

(8-ம் பக்கம் பார்க்க)

பஞ்சாப் கட்டுரை

நான் கண்ட சந்த்ராம் : ஜாட் - பாட் - தோடக் மண்டல் (3)

ஜாட்—பாட்—தோடக் மண்டலின் உயிர்நாடியான உருது மொழிப் பத்திரிகை 'கிராந்தி'யின் சீரிய சாதனைகளைக் கடந்த வாரக் கட்டுரையில் கண்டோம். அதன் தோழமைக்கென்று மற்றுமொரு பத்திரிகை இந்தி மொழியில் துவக்கப்பட்டது. அது உருது மொழியில் அதிகம் தெரியாத, ஆனால், ஜாட்—பாட்—தோடக் மண்டலில் நீங்காப் பற்றுகொண்ட ஐக்கிய மாகாண (தற்போதய, உத்தர பிரதேச), வங்காள பீகார், பம்பாய், போன்ற இதர மாகாண மக்கள் நலன் கருதித் துவக்கப்பட்டதாகும். அதைப் பற்றிய குறிப்பும் ரிவோல்ட்'டில் காணக் கிடக்கிறது. அது என்ன?

"யுகாந்தர்"

அதாவது: ஜாட்-பாட்-தோடக் மண்டலின் பிரமுகர்கள், "யுகாந்தர்" என்ற புது இந்தி மொழிப் பத்திரிகையைத் துவக்கத் தீர்மானித்தார்கள். அது மாதம் இருமுறை ஏடு. ஐக்கிய மாகாணம், வங்காளம், பீகார், பம்பாய், இன்னும் இதர மாகாணத்து. ஜாட்-பாட்-தோடக் ஆதரவாளர், அநுதாபீகள் பல்லோரின் இடைவிடா வேண்டுகோளுக் கிணங்கவே அவ் ஏடு துவக்கமானது. பெண்களது கவனத்தையும், பங்கையும் ஏற்க முந்திற்று. அது கொள்கையில், "கிராந்தி" பத்திரிகைப் போன்றதே. "கிராந்தி" உருது; "யுகாந்தர்" இந்தி. சமூக சீர்திருத்தத்தில் நாட்டங் கொண்டோரின் நன் மதிப்பை "யுகாந்தர்" பெறும் என்று நம்பப்பட்டது. பஞ்சாபில் சிறந்த எழுத்தாளர் எனப் புகழ்வாய்ந்த திரு. சந்த்ராம் பி ஏ. அவர்களே அதன் ஆசிரியராகப் பணி ஏற்ருர். ஆண்டு சந்தா ரூ 3.

சுயமரியாதை இயக்கமும்-ஜாட்-பாட்-தோடக் மண்டலும்

சந்த்ராம் துவக்கிய பஞ்சாப் ஜாட்-பாட்-தோடக் மண்டலுக்கும், பெரியார் ஈ. வெ. ரா. திராவிட நாட்டில் துவக்கிய சுயமரியாதைக் கழகத்திற்கும் இடையே எத்தகையதொரு தொடர்பு, தோழமை நிலவியது "ரிவோல்ட்" ஆங்கில வார ஏடே பெருந் துணை அளிக்கிறது. அது என்ன என்பதனைக் காண்போம்.

அதாவது : ஜாட்—பாட்—தோடக் மண்டலின் செயலாளர், 8-5-1929 தேதியிட்ட "ரிவோல்ட்" ஏட்டின் வாயிலாகக் கூறுகிருர்:—

"ரிவோல்ட்" என்னும் வார ஏடு, சுயமரியாதை இயக்கத்தின் 'பிரங்கி' என அவ்வியக்கத்தின் செயலாளர் மூலம் அறியலானேன். உங்கள் சுயமரியாதை இயக்கம் எக் கொள்கைக்காக, எந்த இலட்சியத்திற்காகப் போர் புரிகிறதோ, அதே கொள்கைக்காகவும் அதேஇலட்சியத்திற்காகவும்எங்கள் ஜாட்-பாட்-தோடக் மண்டல் (இந்துக்களிடை மண்டிக் கிடக்கும் சாதிப்பிணக்கை உடைத் தெரியும் கழகம்) பணியாற்றி வருகிறது. எங்கள் கழகம் சுமார் ஐந்தாண்டு காலங்களாக இயங்கி வருகிறது. இவ்வைந்தாண்டுகளாக எண்ணற்றக் கலப்புத் திருமணங்களை செய்துவைத்ததில் பெரு வெற்றி பெற்ருேம், எங்கள் கழகத்தில் 600-க்கும் மேலான ஆக்க வீரர்கள் அங்கம் பெற்றுள்ளார்கள். அவர்கள் அத்தனை பேரும் கீழ்க்கண்ட சபதம் ஏற்றவர்கள்:—

"எந்த ஒரு இந்துவும் கலியாணம் ஆகாதவராயிருந்தால், ஆணுனாலும், பெண்ணுனாலும், சாதிவிட்டு வேறு சாதியில் கலப்பு மணம் ஏற்கத் தயார். கலியாண மாணவர்கள் ஆணோ, பெண்ணோ, தத்தம் புதல்வர்களையோ, புதல்வியர்களையோ, சாதி விட்டு வேறு சாதியில் கலப்பு மணம் செய்விக்கத் தயார். கழக சந்தா குறைந்தது ரூ. 2/- அல்லது கூடுமானுல் அதற்கு மேலும்—செலுத்தத் தயார்."

சாதிப் பிணக்கை உடைத்தெரிவதில் நம் இரு கழகங்களும் ஒன்றிய கருத்துடையதாய் இருத்தலால், எங்களது உருதுமொழி கழக ஏடான "கிராந்தி"யை ஏற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக தங்களது "ரிவோல்ட்" பத்திரிகையை அனுப்புதல் நலமாயிருக்கும். ஒரே கருத்துடைய நம் இரு தோழமைக் கழகத்திற்குள் இத்தகு பரிமாறல் நிகழ ஒப்புவீர்களென நம்புகிறேன். இல்லையெனின், சுயமரியாதை இயக்கத்தின் முழு விவரங்கள் அடங்கிய, குறிப்பிட்ட "ரிவோல்ட்" ஏட்டையாகிலும் அருள் கூர்ந்து அனுப்புவீர்க்ளாக.

பெரியார் ஈ. வெ. ரா.வின் பதில் :

தங்கள் கடிதங் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. உங்கள் கழகம் (ஜாட்-பாட்-தோடக் மண்டல்) எக்குறிக்கோளைப்பற்றி நிற்கிற தென்பதனைக் காண உண்மையில் பூரிப்பு எழுகிறது. சுயமரியாதை இயக்கத்தின் முழு நோக்கங்களையும், இலட்சியங்

'திருவேடம்'

களையுங் கண்டால், தாங்களும் அதனுடன் ஒத்துழைக்க முன்வருவீர்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கை எங்களுக்குண்டு, உங்கள் உருது மொழி ("கிராந்தி") ஏட்டை நாங்கள் பயன் படுத்த இயலா விட்டாலும், அதை ஏற்று அதற்குப் பதிலாக எங்கள் "ரிவோல்ட்" ஏடுகளை அனுப்பத்தடையில்லை முந்திய ஏடுகளையும், எங்கள் சுயமரியாதை இயக்கச் சம்பந்தப்பட்ட இதர அறிக்கைப் பத்திரங்களையும் அனுப்புகிறோம். அவைகளினின்று இயக்கத்தைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளலாம். வெல்க உமது கழகம், —(ஒம்) ஈ. வெ. ரா.

வடக்கும்-தெற்கும் !

இந்திய மக்கள் தெற்கென்றும், வடக்கென்றும், மேற்கென்றும், கிழக்கென்றும் பிணங்கி உழல்வது எதனுல்? சாதிச் சனியனின் பாகு பாட்டால் தான்! சாதிப்பிணக்கு உடைந்து வீழுமேல், மனிதாபி மானம் மிக்கோங்கி, எம்மனிதரும் ஒன்றிய அன்புடையராய் இணங்கி வாழ்வர் என்பது சந்த்ராமின் கொள்கை. அதன் விளக்கத்தை கிழ்க்கண்ட லாகூர் கடிதத்தினின்று அறியலாம்.

THE LAHORE LETTER

Dear Sir, Lahore, 21st June, 1929

The 'Revolt' has interested us greatly. Its articles represent the ture spirit of Self-respect. which the Non-Brahmins and others the victims of the iniquities of caste system, should imbibe in them. We are especially glad to note that the Self-respect Movement is a veritable crusade against the present day institution of VARNASHRAM or caste system as we call it in the North We have been giving currency to your articles In the KRANTI and you will find one or two articles translated tnto Hindu and inserted in the next issue of our magazine.

You will be interested to know that there are very potent forces working in the North to uproot the evil of caste system, and there is remarkable awakening among those who have been suffering under the iron heels of this injurious system. The people are realising as never before the havoc done by the caste system and when these ripples of dissatisfaction combine with the waves rising in the South, they are destined to take the form of a huge storm, which will sweep all these unnatural barriers put up between man and man, and the Hindu society will become a homogenious whole.

It is misfortune that in india such leaders as Pandit Madan Mohan Malaviya and others do not see the danger, and are still harping the tunes that suited the times a century ago In order to make the North and South join together in this important task of demolishing the birth distinctions which are eating the vitals of Hindu society we have decided to start a fortnightly paper in Hindi which will be of the same type as the 'Revolt' and we believe it will prove to be a real link between your movement and ours In the best of bonds,

Secretary Jat Pat Tadak Mandal.

(Page 272 : 'Revolt' 30th June, 1929)

லாகூர் கடிதம்.

லாகூர், ஜூன் 21, 1929.

அன்பார்ந்த ஐயா. (ஆசிரியர், 'ரிவோல்ட்')

"ரிவோல்ட்" எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. சுயமரியாதையின் உயிர்நாடி அதன் கட்டுரைகளில் மிளிர்ந்து துலங்குகிறது. சாதிப் பிணக்கினுல் அல்லல் பட்டு அவதியுறும் பார்ப்பனர் அல்லாதாரின் உணர்ச்சி எத்தன்மையது என்பதைத் தெற்றென விளக்குகின்றன. "வர்ணுஷ்ரம்" அல்லது சாதிக்கட்டு என்னும் பீடையை ஒழித்துக்கட்ட எத்தகையதொரு சக்தி வாய்ந்த வீரப்போரை, சுயமரியாதை இயக்கம் தொடுத்திருக்கிறது என்பதனைக் கண்டு, மிக மிக மகிழ்கிறோம். "ரிவோல்ட்"டில் காணப்படுகிற கட்டுரைகளை அவ்வப்போது உருதுவில் பெயர்த்து எழுதி "கிராந்தி"யில் வெளியிட்டு வருகிறோம். அடுத்த "கிராந்தி" வெளியீட்டில் ஓரிரண்டு மொழிபெயர்ப்புக் கட்டுரைகளைக் காணலாம்.

சாதிக் கொடுமைகளின் வேரை அறவே கல்லியெறியும் பணியில் வடக்கே மகத்தானதோர் சக்தி எங்கள்பால் நிலவியுள்ளது என்பதை அறிய தாங்கள் மகிழ்ச்சியுறுவீர்கள். சாதிச் சாக்காட்டின் மூர்க்கப் போக்கினுல் மிதியுண்டு துவண்டவர்களிடம், எங்கள் முயற்சியால் ஒரு பெரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. சாதிப் பிடியால் எத்தகையதொரு கொடுமை தாண்டவம் புரிகிறது என்பதனை மக்கள் இன்று, முன்னை நாட்களைவிட, நன்கு உணர்கிருர்கள். சாதியின் மீது உந்தி எழும் இத்தகைய எதிர்ப்புணர்ச்சி அலைகள், தென்னிந்தியாவில் கொதித்தெழும் பேரலைகளுடன் கூடுமேல், பெரும் புயலாக உருவெடுத்து, சாதிக் கட்டுப் பாடுகளைச் சின்னு பின்னமாகப் பிய்த்தெரிந்து, வேற்றுமைகளைப் போக்கி ஒற்றுமையை நிலநாட்டி, இந்துக்கள் அனைவரும் ஒரே கூட்டுமக்களாக வாழச்செய்தே தீரும்.

சாதிப்பிரிவில் மண்டிக்கிடக்கும் பேராபத்தை உணர்ந்து பாராது, பண்டித மதன் மோகன் மாளவியா போன்ற நம் இந்தியத் தலைவர்கள்; சாதியை நிலைநிறுத்தப் பழைய காலப் பல்லவியையே பாடித்திரிவது வெட்கக் கேடாகும். பிறப்பால் உயர்வு தாழ்வு வகுத்து, அதன் விளைவாக மக்கள் உரிமை இழந்து வாழ்தலை ஒழிக்கவும், இவ்விஷயத்தில் தெற்கும்-வடக்கும் ஒன்று சேரவேண்டியும், இந்தியில் ("யுகாந்தர்") 'ரிவோல்ட்' வடிவினதை யொப்ப மாத மிருமுறை ஏடொன்றைத் துவக்கத் தீர்மானித்துள்ளோம். அப்பத்திரிகையே தங்கள் சுயமரியாதை இயக்கத்திற்கும் எங்கல் ஜாட்-பாட்-தோடக் மண்டலுக்கும் தொடர் சங்கிலியாகத் துவங்கும் என்று எண்ணுகிறோம்.

வெல்க தோழமை,

செயலாளர் ஜாட்-பாட்-தோடக் மண்டல்

('ரிவோல்ட்''—பக். 212 : 30-6-1929)

குறிப்பு : ஜாட்-பாட்-தோடக் மண்டலின் செயலாளர் பதவியில் பின்னின்று இயங்கியவர் திரு சந்த்ராம் அவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

(அடுத்து அரசியல் தலைவர்களான டாக்டர் அம்பேத்கார், காந்தியார், ஜின்னு போன்ருர்களோடு சந்த்ராம் கொண்ட தொடர்பின் சம்பவங்களைப் பற்றிக் காண்போம்.)

திராவிடப் பூங்கா

வந்தைவேள்

நமது வள்ளல்.

நீங் தமிழகத்தில் தொழிற் சங்கத்தைப் பெற்றெடுத்து கட்டி வளர்த்து, சமதர்ம வழி நடைபோடவிட்டு மறைந்த வள்ளல் வேறு யாராயிருக்கக் கூடும்? அவரே தமிழ்த் தென்றல் திரு. வி க. ஆவர். அவரதுஉள்ளம் உழைப்பு விழைவு எல்லாம் தொழிலாளர் இயக்கத்தில் எங்ஙனம் ஊடாடல் கொண்டாடின? சற்றே காண்போம்.

"எனது வாழ்க்கையைப் பெரிதுங் கவர்ந்தது தொழிலாளர் இயக்கம். அவ்வியக்கம் ஊண் உறக்கத்தைக் குலைத்தது; என்னை மெலிவித்தது, அஃது என்னைத் தன்னுள் யோகியாக்கியது'...... என்று கூறிப்பேர்ந்தார் நந் திரு. வி க. அவர்கள்.

வித்திட்டவர்...!

திரு. வி. க. முதல் முதல் 1908-ம் ஆண்டு, 'ஸ்பென்ஸர் கம்பெனி'யில் கணிதராக வேலையில் அமர்ந்தார். ஆங்கே ஓர் நாள் ஒரு வெள்ளைத்துரை மகனர் ஏதோ பொருள் வாங்க வந்தார். யார் அவர்? ஆ! அவர்தான் ஒர் ஹார்டியா? அவரது வாழ்க்கைக் குறிப்பைப் பத்திரிகைகளில் பார்த்து களிப்பெய்தினேனே! அவர்தான் இவரா? அவரே பார்லிமெண்ட் அங்கத்தினர்! தொழிற் கட்சித் தூண்! அவரைப்போல் நாம் ஏன் உழைக்கக் கூடாது? தமிழ் நாட்டுத் தொழிலாளர்களைக் கரையேற்றக் கூடாது? — என்றெல்லாம் உணர்ச்சி வயப்பட்டு உள்ளங் கிளர்ந்தெழுந்தார் திரு.வி.க. தொழிலாளரைப் பற்றிய நூல்களை ஒவ்வொன்ருகக் கரைத்துக் குடித்து தொழிலாளருக்கு உழைக்க முன்வந்தார். எனவே திரு. வி. க. தொழில் உள்ளம் பூண வித்திட்டவர் ஓர் ஹார்டி அன்ருே ?

சென்னைத் தொழிலாளர் சங்கத் தோற்றம் !

திரு. வி. க, அவர்களை இனி "வள்ளல்." "வள்ளல்" என்றே குறிப்பிடுவோம்.

"ஸ்பென்ஸர் கம்பெனி"யில் வேலையை முடித்துக்கொண்ட வள்ளல், ஆயிரம் விளக்கு வெஸ்லியன் முதல்தர மூலாதாரப் பள்ளியிலும், வெஸ்லியன் டெக்னிகல் இன்ஸிடிடியூட்டிலும் ஆசிரியர் பணி ஏற்ருர், பின்னர் சென்னை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக அமர்ந்தார், அதுபோழ்து சூளை பட்டாளத்தில் இயங்கிய 'வெங்கடேச குணமிர்த வர்ஷணி சபை'யின் காரியதரிசி செல்வபதி அவர்களின்தொடர்பு வாய்த்தது. அதன் பயனய் சபைக் கூட்டத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் வாய்ப்பு வள்ளலுக்குக் கிட்டியது. தொழிலாளர் கூட்டமே சாய்ந்து வந்ததால் தொழிலாளர் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு வலிய கருத்துக்களைத் தூவி சொன்மாரி பொழிந்துத் தள்ளினுர், கேட்டோர் நெஞ்சம் துளிர்த்தது. எழுச்சிப் பெருக்குற்றனர். உவகையும் ஊக்கமும் பெற்றுர் வள்ளல்.

அதற்கிடையில், பள்ளி ஆசிரியர்ப் பணியை முடித்துக் கொண்டு, 'தேசபக்தன்' என்னும் புதினத்தாளின் ஆசிரியர் ஆனுர். அது டிசம்பர் 5, 1917-ல்.

அதுபோது 'இந்தியன் பேட்ரியட்' என்னும் ஆங்கில ஏட்டில், குத்தி திவான்பகதூர் கேசவப் (பிள்ளை) மில் தொழிலாளர் குறைபாடுகளைப் பற்றி எழுதுவார், அவைகளைத் தமிழ்படுத்தி "தேசபக்த"னில் வெளியிடுவது வள்ளலின் ஆர்வம். அவ்விதமாக திவான்பகதூர் கேசவப் (பிள்ளை), இலட்சுமண (முதலியார்), ஜீ. இராமாஞ்சலு (நாயுடு) ஆகியோரின் தோழமை முற்றியது. தொழிலாளர் இயக்கமும் கருக்கொண்டது.

பின்பு 1918-ம் ஆண்டு மார்ச்சு 2-ந்தேதியன்று முதல் தொழிற் சங்கக் கூட்டம் கூட்டப்பட்டது. தொழிலாளர் ஆதரவு அளவுமீறி இருந்தது. 'தொழிலாளர் சங்கம்' அமைக்கத் துடிப்பும் உயிரோட்டம் பெற்றது.

தலைவர்களெல்லாம் ஒன்றுகூடி தீர ஆலோசித்து ஏப்ரல் 27, 1918-ல் 'சென்னை தொழிலாளர் சங்க'த்தைப் பெற்றெடுத்தார்கள்.

அதற்கு முதல் தலைவராக B. P. வாடியா அவர்களையே அமர்த்தினுர்கள். வள்ளல்துணைத் தலைவர்களுள் ஒருவராக பணிஏற்ருர். வாடியாஆங்கிலத்தில்தொழிலாளர்களிடை வீரவுரை ஆற்றுவார். அதைத் தேனெழுகும் திங் தமிழில் வள்ளல் வடித்துக் கொடுப்பார். தொழிலாளர் உணர்ச்சிக் கடலில் மூழ்குவர்.

பிறகு காங்கிரஸ் சார்பாக பிரசாரத்திற்குச் செல்லுமிட மெல்லாம் தொழிற் சங்கங்கள் முளைத்தோங்க வித்திட்டுச் சென்ருர் வள்ளல். சங்கங்கள் முளைத்தனதழைத்தன.

பல சங்கங்கள் பிறப்பு !

முதன் முதலாகத் தோன்றிய **சென்னைத் தொழிலாளர் சங்கத்தைப்** பின்பற்றிச் சென்னையிலும் வெளியூர்களிலும் பல சங்கங்கள் உருபெற்றன, அவை : எம். அண்ட் எஸ். எம். தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், மின்சாரத் தொழிலாளர் சங்கம், மண்ணெண்ணெய்த் தொழிலாளர் சங்கம், அச்சுத்தொழிலாளர் சங்கம், அலுமினியம் தொழிலாளர் சங்கம், ஐரோப்பிய வீட்டுத் தொழிலாளர் சங்கம், நாவிதர் சங்கம், தோட்டிகள் சங்கம், ரிக்ஷா ஓட்டிகள் சங்கம், போலீஸார் சங்கம், தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் சங்கம் (நாகை), கோவை நெசவுத் தொழிலாளர் சங்கம், மதுரை நெசவுத் தொழிலாளர் சங்கம் முதலியன! முதலியன!!

அவையன்னியில், தென்னிந்தியாவின் வழியைப் பின்பற்றி, பம்பாய், கல்கத்தா, கான்பூர், நாகபுரி முதலிய இடங்களிலும் தொழிற் சங்கங்கள் காணப்பட்டன.

தமிழ் நாட்டில் வள்ளலுடன் ஒத்துழைத்தக் கூட்டுத் தோழர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் : டாக்டர் நடேச (முதலியார்), வி. ஓ. சிதம்பரம் (பிள்ளை), பக்கிரிசாமிப் (பிள்ளை)—(நாகை), சக்கரைச் செட்டியார், எம். ஸி. ராஜா, கஸ்தூரி ரங்க ஐயங்கார் ஆகியோர். இன்னும் பலருமாவர். தமிழகத்தில் தொழிற் சங்கங்கள் நன்கு இயங்க ஆரம்பித்தன, சம்பள உயர்வு, நேரக் குறைவு, இராப் பாடசாலை அமைப்பு, சுகாதாரம் ஆகியவைகளைப் பற்றிப் பிரச்னைகள் எழும். தொழிலாளர்கள் ஒற்றுமையாய் ஒரு முகக் குரல் எழுப்புவார்கள்.

விளைவு? கதவடைப்பும், வேலை நிறுத்தமும் அடிக்கடி நிகழும்.

தொழிலாளர்களைத் தூண்டிவிட்டுக் கலக மூட்டாதே என்று வாடியாவுக்கு அக்கால கவர்னர் லார்ட் பெண்ட்லண்ட் எச்சரிக்கை விடுப்பார். அவ்வெச்சரிக்கையே தொழிலாளரை ஊக்குவிக்கும் சாதனமாக அமைந்தது!

மத்திய சங்கம்.

சிதறுண்டு கிடக்கும் தொழிற் சங்கங்களை ஐக்யப்படுத்த ஒரு மத்திய சங்க அமைப்பு வேண்டுமென்று நமது வள்ளலும், மிருநாளினி சட்டோபாத்தியாயா (சரோஜினி தேவியாரின் தங்கை)வும் விழைந்தார்கள். அங்ஙனமே 1920-ல் கூடிய முதல் மாகாணத் தொழிலாளர் மாநாட்டில் மத்திய சங்கம் உருவாக்கப்பட்டது, வள்ளலே தலைவர் ஆனுர். மிருநாளினி செயலாளர் ஆனுர். திறம்பட வேலை நடந்தது.

தொழிலாளர் ஒற்றுமையையும் கிளர்ச்சிகளையுங் கண்டு வெகுண்ட கவர்னர் லார்ட் வெல்லிங்டன் நமது வள்ளலை எச்சரித்தார். அடக்குமுறைச் சட்டம் கொண்டு வருவேன் என பயமுறுத்தினுர். நாடு கடத்துவேன் எனக் கடிந்துரை பகன்ருர். தொழிலாளர் ஒற்றுமை, அவைகளைத் துச்சமெனத் தூக்கி எறிந்தது. மருண்டார் வெல்லிங்டன், போதாக்குறைக்கு திரு வி. க. மீது கைவைத்து நாடு கடத்தல் செய்தால், தாம் ராஜினுமாசெய்ய நேரும் என்று அக்கால முதன் மந்திரி பனகல் ராஜாவும் கொந்தளிப்பு ஏற்படும், ஆட்சிக்கு அவமானம் என்று வெண்ணுடை வேந்தர் சர். பி தியாகராயரும் சேர்ந்து கவர்னர் வெல்லிங்டனை அச்சுரித்தனர். நாடு கடத்தல் கைவிடப்பட்டது, வள்ளலின் பெருமை நிலைத்தது.

மத்திய சங்கத் தலைமைப் பதவியை வாடியாவிற்கு அளிக்க வேண்டுமென்பது வள்ளலின் அவா. பலர் ஒப்பவில்லை. அது வள்ளலுக்குப் பிடிக்கவில்லை. ஏதோ ஒருவாருக மத்திய சங்கத் தலைமையை சக்கரைச் செட்டியாருக்கு விட்டுவிட்டு மத்திய சங்கமே நமக்கு வேண்டாம், நமது சங்கமே போதுமென்று வள்ளலும், வாடியாவும் வெளியேறி விட்டார்கள்.

அதிலிருந்து சென்னை தொழிற் சங்கத்தையே பேணி வளர்க்கலானுர்வள்ளல். கதவடைப்பு, வேலை நிறுத்தம், கிளர்ச்சி, துப்பாக்கிப் பிரயோகம், வழக்கு, யாவற்றிற்கும் தலை கொடுத்து அரும்பாடு பட்டார். வென்ருர்-அது 1921-ல்

தொழிலாளரிடை ஸர். பி. தியாகராயருக்கு நல்ல மதிப்பு. ஆறு மாத காலமாக இழுத்துப் பறித்துக் கொண்டிருந்த வேலை நிறுத்தத்தை தக்க காரணங்கள் கூறி அதைக் கைவிடும்படியும் உடனே வேலைக்குத் திரும்ப வேண்டுமென்ற வேண்டுகோளுக்கும் செவி மடுத்து ஆயிரமாயிரம் பக்கிங்காம் மில் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினுர்கள். வாழ்ந்தார்கள். சென்னைத் தொழிலாளர் சங்கமும் வளர்ந்தது.

1926-ம் ஆண்டு நிறைவேறிய தொழிற் சட்டப்படி சென்னைத் தொழிலாளர் சங்கம் பதிவு பெற்றது. பின்னர் முதலாளிகளாலும் அங்கீகரிக்கப்பட்டது. அப்படியே பல ஆண்டுகள் ஓடின.

1937-ல் காங்கிரஸ் ஆட்சியின் போதும், இராஜகோபாலாச்சாரியாலும்; அதுபோது தொழில் மந்திரி வி, வி. கிரியாலும் அடக்குமுறை தர்பார் தலைவிரித்தது. அதற்கும் முன்போலவே வள்ளல் திரு. வி. க. தலை கொடுத்து, முடிவில் வெற்றிவாகை சூடினுர்.

1939-ல் சூளைமில் வேலைநிறுத்தப் போராட்டம். அதில் வள்ளலுக்குப் பல இன்னல்கள் வந்துற்றன. கட்சிப்பிணக்கும் ஒற்றுமையின்மையும் தலைவிரி கோலமாய் உருவெடுத்தன. கம்யூனிஸ்ட் தோழர்களால் தொழிலாளர்களின் ஒற்றுமை சக்தி குன்றத் தலைப்பட்டது. கடைசியில் எப்படியோ, பொய் நஷ்டக் கணக்கு தயாரித்து பம்பாயிலிருந்த முதலாளிகள் மில்லையே எடுத்து விட்டார்கள். எண்ணற்ருேர் வேலையிழந்தனர். அதன் அதிர்ச்சி இன்றும் சற்று தொனிக்கத்தான் செய்கிறது.

1941—42ல் பக்கிங்காம் மில் கதவடைப்பு, வேலைநிறுத்தத் தகராறு. பற்பலவகைப் போராட்டங்களுக்குப் பிறகு ஒரு முடிவு காணப்பட்டு வேலைக்குத் திரும்பினர், பக்கிங்காம் கர்னுடிக் மில் தகராறு சம்பந்தமாகவே அவரது கடை காலத்தில் அவரை வீட்டோடுகாவலிலும் வைத்தார்கள். பிறகு விடுதலை ஆனுர்.

இப்படி, தொழிற்சங்க வள்ளலாம் திரு. வி. க. அவர்கள், தேசப்பணி, சமயப்பணி, மொழிப்பணி, சீர்திருத்தப்பணி, ஆகியவைகளினூடே தொழிலாளர் இயக்கத்திற்காகவும் இறுதியாக நாட்டுப்பிரிவினைக்கும் அரும்பாடுபட்டு, அவரது பெயரைச் சொல்ல "M. L U." **சென்னை தொழிற் சங்கத்தை** எழுச்சி பெற நிலைநிறுத்தி வைத்து விட்டு, அயர்ந்து மறைந்தார், அவர் விழைந்ததெல்லாம் அயரா அறக் கிளர்ச்சிகள், சமதர்மப் பண்பு, பொருளாதார விடுதலை, தொழிலுலக வளமை வாழ்வே யாகும்.

சுமார் ஐம்பது ஆண்டு காலப் பொதுப்பணிக்குப் பின் 1953-ம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 17-ம் நாள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தார் வள்ளல் திரு. வி. க! அவர் நாமம் வாழ்க! அவர்தம் உழைப்பு வெல்க!

★

"சரித்திரம் படித்து விட்டார்!"

கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு போக்கு உண்டு! எப்போதும், யாரையாவது ஏதாவது சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் தப்போ, சரியோ, அது பற்றி அவர்களுக்கு கவலையில்லை. தமிழ் நாட்டு அரசியல் உலக நிகழ்ச்சிகளில் நாங்களும் இருக்கிறோம், என்பதை நினைவூட்டுவதைப் போல அடிக்கடி தி. மு. க. மீது சீறுவார்கள்.

நாங்கள், சாந்தி போதிக்கும் சிலர்கள், சமாதானம் விரும்பிகள், கெட்ட போரிடும் உலகை வெறுப்பவர்கள் என்று எங்கே யாவது பேசுவார்கள். ஆனால், பொதுமேடை, சட்டசபை ஆகிய இடங்களில் கம்யூனிஸ்டுகளின் பேச்சு நேர்மாறாக இருக்கிறதே தவிர, நேர்மையை அடிப்படையாகக் கொண்ட சமாதானம் விரும்பியின் பேச்சாகவோ இருந்ததில்லை. முன்னுக்குப் பின் முரண்! இதற்கு பரிபூர்ண உரிமை தமிழ் நாட்டு கம்யூனிஸ்ட்களுக்கு

உண்மைதான் நாங்கள் பேசுவது; எங்கள் கொள்கை உலக சமாதானம்! எந்த பிரச்சினையையும் சர்வ தேச கண்ணோட்டத்தோடுதான் பார்ப்போம் தீர்க்க தரிசிகள், மார்க்ஸ் லெனின், வகுத்துத் தந்ததை அப்படியே பின் பற்றுகிறோம்! நாங்கள் புனிதமான கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்தவர்கள். நாங்கள் மக்களின் நண்பர்கள்! தொண்டர்கள்! எங்கள் கட்சி மட்டுமே மக்கள் கட்சி என்றெல்லாம் சொன்னதையேத் திருப்பித் திருப்பிச் சொல்வார்கள் தமிழக கம்யூனிஸ்ட்கள்.

இத்தியாதி, வித்தைகளின் சிகரமான தமிழக கம்யூனிஸ்டுகளில் ஒருவரான தோழர். இராமமூர்த்தி சென்ற நவம்பர் 24-ம் நாள் தான் சரித்திரம் படித்திருக்கிறார்.

''சரித்திரத்தைக் கொண்டு பார்த்தால் நாடு (இந்தியா) என்றும் ஒற்றுமைப் பட்டிருக்க வில்லை.

—சென்னை சட்ட சபையில்
24—11—55-ல் இராமமூர்த்தி

இந்தியா ஒரு நாடல்ல? இது பல மொழிகளையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும் கொண்டது, " அக்பரும்-குப்தரும் — செங்குட்டுவனும். கனக — விஜயன்களும், புருஷோத்தமனும், சிவாஜியும், அவுரங்கசீப்பும் ஒரே இனத்தவரல்லர். திருக்குறளும், இராமாயணமும், சிலபபதிகாரமும், பாரதமும் ஒரே பண்பாடு கொண்டதல்ல? எனவே குமரி முதல் அந்த 'கிழ'மலை வரையில் உள்ளவர்கள் அனைவரும் ஒரே இனம் ஒரே நாடு இது, என்று பேசுவது பொருந்தாது என்று ஆயிரக்கணக்கான மேடைகளிலும், ஏடுகளிலும் சான்றுகள் காட்டி நாம் சொன்னபோது தேசியத்தாரோடு இந்த கம்யூனிஸ்டுகளும் சேர்ந்துகொண்டு. அறிவிலிகாள்! உங்களுக்கு சரித்திரம் தெரியுமோ! இந்தியாவின் கலாச்சார மாண்புபற்றி, உணருகிற நுண்ணறிவு உங்களுக்கேது! இந்தியா ஒரே நாடுதான். இதற்கு சான்று இராமாயணம் என்று கோஷமிட்டார்கள்

இப்போது இராமமூர்த்திசொல்கிறார் " இந்தியா ஒரே நாடாக என்றுமே இருந்ததில்லை. என்று புத்தி வந்தது! புல்கனின் வந்தார். இராமமூர்த்தி உண்மை பேசுகிறார் இந்தியா ஒரு நாடல்ல ?" என்று

நமக்கு, எப்போதும் நம்பிக்கையுண்டு. உண்மை வெற்றி பெற்றுவிடும் என்பதில் நமக்கு உறுதியுண்டு. நாம் சொல்கிற கருத்துக்களை என்ருவது மக்கள் ஒப்புக்கொள்ளத் தான் போகிறார்கள் என்பதை அப்போதே நாம் சொன்னோம்.

நாம் 'திராவிட நாடு திராவிடருக்கே'' என்ற இலட்சிய முழக்கத்தை முழங்கும் போது. இந்த காம்ரேடுகள், திராவிடம் என்ற சொல்லே ஒரு கற்பனை என்றும். தனிநாடு கேட்பது, குறுகிய மனப்பான்மை என்றும். நாமெல்லாம் இந்தியர்கள் என்றும் சொல்லிவந்தார்கள். இந்த கண்டுபிடிப்பு பிரத்யட்ச உண்மையில் முளைத்தது என்றும் கூறினார்கள் இன்று நாம் சொன்னதை சொல்கிறார்கள்.

ஐந்தாண்டு திட்டத்தின் ஓர வஞ்சனையைப் பற்றி நாம் எடுத்துக் காட்டியபோது, வடக்காவது, தெற்காவது, புல்லர்களே! நீங்கள் அழிந்து படுவீர்கள்! வீணாக பேதம் கற்பிக்கிறார்கள் பித்தர்கள், பரந்த மனப்பான்மை கிடையாது இந்த திராவிடத்தான்களுக்கு! இவர்களை நாட்டை விட்டே ஒழித்து விட வேண்டும்! என்றெல்லாம் நம்மைப் பற்றிப் பேசினார்கள் பாரதத்தின் தவமணிகள்!

இன்று ஐந்தாண்டு திட்டத்தில் பலன் தெற்குச் சீமைக்கு கிடைக்கவில்லை, வடக்குதான் அந்த திட்டத்தால் வாழுகிறது! என்பதை,பழைய, புதியஎல்லா காங்கிரஸ்காரர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

இதே போன்றுதான், நாம் சொன்ன சரித்திர ஏடுகளின் உண்மையை நண்பர் இராமமூர்த்தி இதுபோது ஒப்புக் கொள்கிறார். எப்போதுமே, கட்சி நலனுக்காக, மக்களின் நலன், நாட்டு நலன் ஆகியவைகளை மதிக்காத கம்யூனிஸ்ட் வட்டாரத்தில், இந்தியா ஒரு நாடல்ல ? என்ற பேச்சு எழுந்தது நமக்கு ஒரு வெற்றி!

ஆனாலும், ஒன்று, இந்தியா ஒரு நாடல்ல? என்ற பெரிய உண்மையை ஒப்புக் கொண்ட இராமமூர்த்தி, 'திராவிட நாடு திராவிடருக்கே'' என்ற உயரிய இன மக்களின் முழக்கத்தையும் விரைவில் உணர்ந்து காரிய மாற்றுவாரா? பொறுத்துப் பார்ப்போம்! நல்ல பாதையில் கம்யூனிஸ்டுகள் நடந்து, அதன் மூலம் தமிழகத்துக்கு, திராவிடத்துக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டும் என்பது தான் நம் எண்ணம்.

திராவிட நாடு திராவிடர்க்கே!

முத்துப்பேட்டை, ந. தருமலிங்கம்

தலைமைக் கழகம் : அறிக்கை—31/55

தி. மு. கழக உறுப்பினர் சேர்த்தல்

1955 டிசம்பர்—1956 சனவரி

ஆகிய இரண்டு திங்களும்

உறுப்பினர் சேர்க்கும் காலமாகும்

●

(1) திராவிட முன்னேற்றக் கழகத்தின் பழைய உறுப்பினர்களைப் புதுப்பிப்பதற்கும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் உரிய காலமாக, 1955 டிசம்பர்—1956 சனவரி ஆகிய இரண்டு திங்கள்களும் தேர்ந்தெடுக்கப் படுகின்றன

(2) இப்பொழுதுள்ள உறுப்பினர்கள் 1956 சனவரித் திங்கள் 31-ம் நாளுக்குள் தம் உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அதற்குள் புதுப்பித்துக் கொள்ளா விட்டால், 1956 பிப்ரவரி 1-ஆம் நாளிலிருந்து தி. மு கழக உறுப்பினர் தகுதியை அத்தகையோர் இழந்துவிட்டதாகக் கருதப்படுவர். அதற்குப் பிறகு சேர்பவர்களுக்குப் பழைய உறுப்பினர் தகுதி சேர்த்துக் கணக்கிடப்பட மாட்டாது ; புதிய உறுப்பினர் என்ற முறையிலேயே நோக்கப்படுவர்,

(3) உறுப்பினரைப் பதிவு செய்யும் விண்ணப்பத் தாள்களை அந்தந்த மாவட்டக் கழகங்களிலிருந்து அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(4) கிளைக் கழகம் தோற்றுவிக்கக்கூடிய, ஆனல் இதுவரையில் தோற்றுவிக்காத இடத்தில் (சிற்றூர் அல்லது பேரூர் அல்லது நகரம்) முக்கியமான ஒருவர் பொறுப்பாளராக இருந்து விண்ணப்பத் தாளை மாவட்டச் செயலாளரிட மிருந்து பெற்று உறுப்பினர்களைச் சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட்டுப் பிறகு கிளைக் கழகம் அமைத்துக் கொள்ளலாம்.

(5) கிளைக் கழகம் அமைக்கக் குறைந்தது 25 உறுப்பினர்கள் வேண்டும். கிளைக் கழகம் அமைக்க முடியாத இடத்திலுள்ளவர்கள்; பக்கத்திலுள்ள ஏதேனும் ஒரு கழகத்தில் உறுப்பினராகத் தம்மை இணைத்துக் கொள்ளலாம்.

(6) கிளைக் கழகச் செயலாளரும், கிளைக் கழகம் இல்லாத ஆனல் அமைக்கக்கூடிய இடத்தில் முக்கிய பொறுப்பாளருந்தான உறுப்பினர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

(7) ஒவ்வொரு விண்ணப்பத் தாளிலும் இருபத்தைந்து உறுப்பினர்களைப் பதிவு செய்யலாம் ஒவ்வொரு கிளைக் கழகமும் எவ்வளவும் உறுப்பினரைத் தம் ஊரில் சேர்க்க முடியும் என்று எண்ணுகிறதோ அவ்வளவு உறுப்பினருக்குத் தேவையான பதிவுத் தாள்களை மாவட்டக்கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(8) ஒவ்வொரு உறுப்பினரும், உறுப்பினர் கட்டணமாக அணு 8 செலுத்த வேண்டும்: ஒவ்வொரு உறுப்பினரும் செலுத்தும் எட்டு அணுவில் நான்கு அணுவைக் கிளைக் கழகம் வைத்துக்கொண்டு மீதி நான்கு அணுவை நேரே தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். மாவட்டக் கிளைக்குச் சேரவேண்டிய தொகையைத் தலைமைக் கழகம் பிறகு கணக்குப் பார்த்து அந்தந்த மாவட்டக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கும்.

(9) உறுப்பினர் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத் தாளையும், தலைமைக் கழகத்திற்குச் சேரவேண்டிய தொகையையும் (பாதி கட்டணத் தொகை) பொதுச் செயலாளர் தி. மு கழகம், அறிவகம் இராயபுரம், சென்னை-13 என்ற முகவரிக்கு கிளைக் கழகச் செலவில் அப்படியே அனுப்பிவைக்க வேண்டும்.

(10) விண்ணப்பத் தாளும், கட்டணத் தொகையும் வந்து சேர்ந்தவுடன் உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் தலைமைக் கழகத்தால், கிளைக் கழ கழகத்தின் மூலம் உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப்பெறும். உறுபபினர் உரிமைச் சீட்டை, உறுப்பினர் சான்றுக்காக என்றென்றும் வைத்துக் காப்பாற்றி வைக்க வேண்டும்.

(11) கிளைக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும். மாவட்டக் கழகத்தில் வைத்துக் காப்பாற்பப்பட வேண்டிய சீட்டுக்களும் அவ்வப்போது அனுப்பி வைக்கப்பெறும்.

(12) எந்தக் கிளைக்கழகத்திலும் தொடர்புகொள்ள விருப்பமில்லாடில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் என்ற அளவிலேயே இருக்க விரும்புவர்கள் தங்கள் பெயர், முகவரி, முன்பு உறுப்பினரா, அல்லவா என்ற விவரம் ஆகியவைகளைக் குறித்துக் கையெழுத்துப் போட்ட முடங்கலை எட்டு அணுவுடன் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். அத்தகையோருக்கு உறுப்பினர் உரிமைச் சீட்டு தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பெறும்.

(13) பின்னல் எப்பொழுதாவது ஒரு கிளைக் கழகத்திலிருந்து மற்றொரு கிளைக் கழகத்திற்கு தக்க காரணங்களோடு தம்மை மாற்றிக் கொள்ள விரும்புபவர்கள், தனியே நான்கு அணுவைத் தலைமைக் கழகத்திற்குச் செலுத்தி மாற்றிக் கொள்ள வேண்டும்.

(14) எந்தக் கிளைக் கழகமும் புதிய தேர்தல் நடத்தக் கூடாது. உறுப்பினர் சேர்க்கும் பணி மட்டுந்தான் இப்பொழுது நடைபெற வேண்டும்.

(15) பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்—பெண்கள் மட்டுமே தி மு கழகத்தில் உறுப்பினராகும் தகுதியடைந்தவராவர். மாணவர்கள் தி. மு. கழகத்தில் உறுப்பினராக வேண்டாம். அவர்கள் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி: மு. கழகம்

முக்கிய அறிவிப்பு : முகவரி மாற்றம்.

திராவிடன் அலுவலகம்

சோமு அச்சகம்

●

1-12-55 முதல் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எனவே தோழர்கள் அதற்கேற்ப கடிதப் போக்குவரத்தும் தொடர்பும் கொள்ளவேண்டுகிறோம்.

நிர்வாகி :

"திராவிடன்"

16/99 அம்மன் கோயில் தெரு

வால்டாக்ஸ் ரோட் போஸ்ட் : : சென்னை 1.

திராவிடன்

சென்னை : 2—12—55 : வெள்ளி

தென்னாட்டுத் திலகம்

★

தென்னாட்டில் தேசிய உணர்ச்சியை வளர்த்து—நிலைபெறச் செய்து. மகத்தானதோர் இயக்கமாகவும் இயங்கச் செய்த முக்கிய தலைவர்களில் ஒருவரான டாக்டர் பி. வரதராசலு அவர்களின் 68-ம் ஆண்டு பிறந்ததின விழா 27—11—55-ம் நாளன்று சென்னையில் சிறப்புற நடைபெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி யடைகிறோம்,

இவ்விழாவில், முதலமைச்சர் காமராசர் அவர்களும், பெரியார் அவர்களும், சென்னை மேல் சபையின் எதிர்கட்சித் துணைத் தலைவர் டாக்டர் வி. கே. ஜான், செட்டி நாட்டரசர் எம். எ. முத்தையா எம்.எல்.எ,, சட்டசபை முன்னாள் காரியதரிசி ஆர். வி. கிருஷ்ணய்யர், தி. மு. கழக சார்பில் தோழர் கே. எ. மதியழகன், ஜனாப் அப்துல் மஜித் ஆகிய பல்வேறு கொள்கையுடைய கட்சியினரும் கலந்து கொண்டு டாக்டர் வரதராசலு அவர்களின் பிறந்ததின விழாவினை சிறப்பித்திருப்பதிலிருந்தே அவரது பொதுப்பணியின் உயர்தன்மையை அனைவரும் எளிதில் உணரக் கூடும்.

அன்றைய தமிழ் நாட்டுக் காங்கிரசின் உயிரும் உடலும்' சொல்லும் செயலும் இவர்களே யாவர், என அரசியல் நிகழ்ச்சிகள் நினைவூட்டிவரும் தலைவர்களான, மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும், மற்றும் பெரியார் ஈ. வே. ராமசாமி, டாக்டர் வரதராசலு ஆகிய மூவருமே யாகும்.

இம்மூவரும்—தமிழகத்தில் தேசிய உணர்ச்சியை வலுப்பெறச் செய்யவும் அச்சக்தியை ஒன்று திரட்டவும், ஆற்றிய மகத்தான தொண்டு ஈடு இணையற்றதென்றே கூறலாம்.

வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், இவர்களால் வளர்க்கப்பட்ட அத் "தேசிய உணர்ச்சியை" இவர்களே எதிர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் இம்மூன்று தலைவர்களும் அடைந்த திகைப்பும், கஷ்ட நஷ்டங்களும் சாமான்யமானதல்ல வென்றால், தேசிய இயக்கப் பணியில் இவர்கள் ஆற்றியுள்ள தொண்டினை நம்மால் விவரிக்கத்தான் இயலுமோ ?

" நாயுடு—நாயக்கர்—முதலியார் " என அன்றைய அரசியல் உலகில் பேசப்படும்போது இம்மூன்று தலைவர்களுமே மக்கள் மனதில் தோன்றுவர்.

டாக்டர் வரதராசலு அவர்கள் தமது 'தமிழ் நாடு' தின இதழ் வாயிலாக ஆற்றிய தொண்டு அவரது பொதுவாழ்வில் குறிப்பிடத்தக்கதாகும். அன்று 'தமிழ் நாடு' தின இதழ் ஒரு நாளைக்கு கிடைக்கவில்லை யெனில் அதைத் தொடர்ந்து வாசிப்போரின் மனக்குறை எத்தகையதா யிருக்குமென்பதை நாமும் உணர்ந்திருக்கிறோம். தேசிய உணர்ச்சியையூட்ட தமிழ்நாடு எந்த அளவுக்குத் தனது சக்தியைப் பயன்படுத்தி வந்ததோ அதுபோலவே வகுப்பு வெறியர்களின் கொட்டத்தை அடக்கவும் 'தமிழ்நாடு' முன்நின்று போரிட்டிருக்கிறது.

தென்னாட்டில் மட்டுமல்லாது, இந்தியத் துணைக் கண்டத்திலேயே இன்று குறிப்பிடத்தக்க ஒரு தலைவராய் விளங்க வேண்டிய டாக்டர் வரதராசலு அவர்களின் அறிவாற்றல் அனைத்தும் மங்க வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், வகுப்புவெறியர்களின் சூழ்ச்சியும் பித்தலாட்டங்களுமே யாகும்.

நிற்க, டாக்டர் வரதராசலு அவர்கள் தொழிலாளர் இயக்க கலனிலும் தமது பணியை அர்ப்பணித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

டாக்டர் அவர்கள், தமது பொதுவாழ்வில், கொள்கையையே பெரிதாக மதித்திருக்கிறாரே யல்லாது, கட்சி லேபிலை மட்டுமே உயரியதெனக்கொள்ளவில்லை. ஆதலாலேதான் அவர்கள், தாம் வளர்த்த காங்கிரசையே விட்டு விலக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

" இம் மூவரும் காங்கிரசை விட்டு விலகாதிருந்தால் தமிழ் நாட்டுக்கு மிகுந்த நன்மை ஏற்பட்டிருக்கும் " என்று சிலர் நா கூசாமல் பேசக்கூடும். ஆனால் கொள்கையில் உறுதிப்பாடும் தன்மானமும் உள்ளவர்கள், கட்சியின் செல்வாக்குக்காக மட்டுமே அதன் காலடியில் விழுந்திருக்க மனம் ஒப்புவரா யென்பதை அவர்கள் உணருவதில்லை.

, அன்றைய நாட்களில் அடக்குமுறை கொடுமைகளுக்கும் மற்றும் பல தொல்லைகளுக்கும் உட்பட்டு காங்கிரசை வளர்த்த டாக்டர் பி. வரதராசலு அவர்களுக்கு, இன்று பெரும் பதவிகள் அளிக்கப்படாவிடினும், அதைவிட ஆயிரம் மடங்கு பெருமையும் தன்மானமுமுள்ள வகையில் அவரின் பெயரும், பொதுப்பணியின் சிறப்பும் தென்னாட்டு மக்களின் இதயத்தில் குடிகொண்டிருப்பதானது அவருக்கு என்றென்றும் ஆறுதலும் உற்சாகமும் அளிக்குமென்று நம்புகிறோம்.

டாக்டர் வரதராசலு அவர்களின் அரசியல் கொள்கைக்கும் நமக்கும் வேறுபாடுகள் உண்டு. எனினும் தென்னாட்டில் தலைவிரித்தாடி வந்த வகுப்பு வெறித் தன்மையை ஒழித்துக் கட்ட அவர் எவ்வித சலசலப்புக்கும் அஞ்சாது பணியாற்றிய சம்பவங்களை எண்ணிப் பார்க்கும் ஒவ்வொருவரும் டாக்டர் அவர்களுக்கு தங்களின் மனப்பூர்வமான வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரிவிக்கக் கடமைப் பட்டவர்கள் என்பதை உணரக்கூடும்.

ஆதலினால்தான் தி. மு. கழகம் உள்ளிட்ட எல்லா கட்சியினரும் டாக்டரின் பிறந்ததின விழாவில் தங்கள் அன்பினைச் செலுத்தியிருக்கின்றனர்.

சென்னை முன்னாள் முதலமைச்சரான ஆச்சாரியார் அவர்களை அரசியல் உலகிற்கு அறிமுகப்படுத்தி வைத்தவர் டாக்டர் (நாயுடு) அவர்களேயாகும் என்றால், அவரின் அறிவாற்றலை நாம் மேலும் விளக்கத் தேவையில்லை யென்று கருதுகிறோம்,

இவ்வித ஆற்றல்படைத்த டாக்டர் அவர்களுக்கு, வகுப்புவெறியர்கள் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் ஏற்படுத்திய தொல்லைகள் ஏராளம். அத்தீய சக்திகளைத் தகர்த்தெறிய முனைந்த டாக்டர் அவர்கள், காங்கிரசிலிருந்து விலகி வேறு முகாமிலும் தொடர்பு கொள்ள நேரிட்டது எனினும் அந்நாட்களில் கூட தமது அரசியல் பண்பிலிருந்து வழுவியவரல்ல.

திராவிடம்—உண்மையான சுதந்திரத்தைப் பெற்றிருப்பின், இதுவரை டாக்டர் வரதராசலு போன்ற தலைவர்களின் அறிவாற்றல், மக்களின் நல்வாழ்வுக்கு எவ்வளவோ பயன்பட்டிருக்கும். எனினும் டாக்டர் அவர்களின் வாழ்நாளில் இந்த வாய்ப்பினைப் பெற வேண்டுமென்பதே நமது மனப்பூர்வமான ஆசையாகும்.

எனவே டாக்டர் வரதராசலு அவர்கள் நீடூழி வாழவும், அது போன்றே அவரது திறமையும் எஞ்சியுள்ள பொதுப்பணியும் திராவிடத்தின் விடுதலைக்கு—குறிப்பாக தமிழகத்தின் தன்மான வாழ்வுக்குப் பயன்படவும் வேண்டுமென நினைவூட்டி மனமார வாழ்த்துவதுடன், டாக்டர் நாயுடுவின் பிறந்ததின விழா, சீறும் சிறப்புடன் நடைபெறுவதற்கு சர்தார் எம்.பணிக்கர் அவர்கள் தலைமையில் நிறுவப்பட்ட வரவேற்புக்குழுவினரின் முயற்சியையும் பாராட்டுகிறோம்

●

வேண்டுகோள்

வணக்கம். நமது அலுவலகத்தை புதிய இடத்திற்கு மாற்றப்படும் வேலையில் ஈடுபட்டிருந்ததால், இவ்வாரம் இரு வண்ணத்துடன் வெளியிட இயலாமைக்கும், ஒரு நாள் கழித்து வெளியிட நேர்ந்தமைக்கும் வாசகர்கள் பொருத்தருள வேண்டுவதுடன், அடுத்த வாரத்திலிருந்து வழக்கம்போல இருவண்ணத்துடன் பிரதி வியாழக்கிழமை யன்றே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி-திராவிடன்

கருத்துக் களஞ்சியம் கற்பனைச் சித்திரம்

திராவிடன் பொங்கல் மலர் '56

●

- அறிஞர் அண்ணா அவர்களும் திராவிடத்தின் தலை சிறந்த எழுத்தாளர்களும் திரட்டும் எண்ணக் குவியல்
- இல்லந்தோறும் இருக்க வேண்டிய எழில்மிகு ஏடு.
- ஓவிய நிபுணர் பாலு சகோதரர்கள் உருவகப் படுத்தும் மூவண்ண முகப்பு

100 பக்கங்கள் : விலை ரூபாய் 1.

ஏஜெண்டுத் தோழர்களும், சந்தாதாரர்களும் தேவையான மலருக்கு முன்பணத்துடன் உடனே எழுத வேண்டுகிறோம்.

—நிர்வாகி 'திராவிடன்'

One side of the page is dark

தென் இந்திய இரயில்வே 'லோன் சொஸைடி' தேர்தல் : ஓர் விளக்கம்.

பொன்மலைத் தோழர்கள் கே. ஏ. குசைபப்பன், வி. இராமானுஜாச்சாரி, டி. சச்சிதானந்தம், திருஞானசம்பந்தம், எம். கோபாலகிருஷ்ணன், சந்திரசேகரன், ஆகியவர்களும், திருச்சித் தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஜி. இராமச்சந்திரன், எம். முஸ்தாபா உசேன், சி. ஜோசப், ஆர். நாராயணசாமி ஆகியவர்களும் கீழ்க்காணும் வேண்டுகோளை விடுத்துள்ளனர் :—

●

தென்னிந்திய ரயில்வே லோன் சொஸைட்டியின் (Co-operative Credit Society) 36,000க்கு மேற்பட்ட பங்குதாரர்கள் அனைவரையும் அழைக்கிறோம். நினைத்தால் நெருப்பாக இருக்கும் சூழ்நிலை உருவாகியுள்ள இந்த நேரத்தில் உங்கள் ஒவ்வொருவருடைய உதவியும் தேவைப்படுகிறது

தொடர்ந்து பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் தவறுகளை எல்லோருக்கும் தெளிவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. காலப்போக்கில் கொஞ்சங் கொஞ்சமாக உருவாகி வளர்ந்த கொடுமைகள், இன்று போராடி ஒழிக்கப்பட வேண்டிய நிலையை அடைந்திருக்கின்றன.

சென்னையிலிருந்து திருவனந்தபுரம் வரையிலும், திருச்சியிலிருந்து மங்களூர் கொச்சித் துறைமுகம் வரையிலும் சிதறிக்கிடக்கும் பங்குதாரர்கள் அனைவரும் ஏக காலத்தில் ஒரே இடத்தில் கூட முடியாமல் விடு, போக்கு வரத்து வசதிகள் தடையாக அமைந்தன. வெகு தூரத்தில் இருப்பவர்கள் நிலைதான் இப்படி என்றாலும், அருகே திருச்சி, பொன்மலை ஆன இடங்களில் இருப்பவர்களுக்குக் கூட இதுவரை சொஸைட்டியைப் பற்றிய கவனம் ஏற்படவில்லை. இந்த சூழ்நிலை இடந்தேடிகளுக்கு எந்த அளவுக்கு அனுகூலமாகப் பயன்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கும்போது பயங்கரமாகவே தோன்றுகிறது.

உங்கள் பரிசீலனைக்கு வைக்கும் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளை தொடர்ந்து ஆராய்ந்து ஒரு நல்ல முடிவிற்கு வரும்படி வேண்டுகிறோம். சிலபல ஆண்டுகளாக, இடைவேளை விட்டு நிகழ்ந்தவைகளைத் தொகுத்துப் பார்த்தால்தான் எவருக்கும் நமது கோரிக்கை என்னவென்பது விளங்கும். ஆதலால், தொடக்கத்திலிருந்து இன்றுவரை உருவான நிகழ்ச்சிகளை கீழே கொடுக்கிறோம்.

கம்யூனிஸ்டுகளும் லோன் சொஸைட்டியும்

ஏழையின் கண்ணீரையும், இல்லாதவனின் இடுப்பொடிந்த வாழ்வையும், பாட்டாளியின் பரிதாப நிலைமையையும், தொழிலாளி படும் துயரத்தையும், பயன்படுத்தி அரசியலில் சூதாடித் தோல்வி கண்ட இந்திய கம்யூனிஸ்டுகள், பரிதாபத்திற்குரிய சொஸைட்டி பங்குதாரர்களின் அடிப்படை உரிமையில் கைவைக்கும் அளவுக்குத் துணிந்து விட்டனர்.

கூட்டுறவுச் சங்கங்களைக் கைப்பற்றுவதன் மூலம் கட்சிக்கு ஆதாயமும், கட்சி ஊழியர்களுக்கு வேலையும் தேடிக் கொள்ளலாம் என்று திட்டம் வகுத்திருப்பதைப் போல சில பல இடங்களில் நடத்திக் காட்டி வருவதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அதே கருத்தில் நம்முடைய லோன் சொஸைட்டியையும் தங்கள் இஷ்டத்திற்கு இயல்பாகும் ஸ்தாபனமாக மாற்றுவதில் முனைந்திருக்கின்றனர்.

கூட்டுறவு என்ற சொல்லுக்கே எல்லோரும் ஒன்று பட்டு பணியாற்றுவது என்பதுதான் பொருளே தவிர, ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாருக்கு அனைவரும் சரண்புகுவது என்பதல்ல. ஆனால் பரம்பரை பரம்பரையாகத்தங்களுக்கும் தங்கள் சந்ததியாருக்கும் சாசனமாக எழுதிவைக்கப்பட்ட சொத்துதான் நம்முடைய கூட்டுறவு சொஸைட்டி என்பதை நிலை நாட்டுவதில் அளவுக்கு மீறிய அக்கரைக் காட்டுகின்றனர். அடிப்படை கருத்தையே அலட்சியம் செய்து விட்டு எதேச்சாதிகாரத்திற்கு வழிகோலும் இவர்கள் செயலை கண்டிக்க வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

ரெயில்வே லேபர் யூனியன் அவர்கள் ஆதிக்கத்தின் கீழ் இயங்குவதால் அதைக்கொண்டு தங்களுக்கான அனுகூலங்களை அத்து மீறியே சாதித்துக் கொள்ள அவர்களால் முடிகிறது.

கடன் வாங்க நாலே நாள்!

எல்லோரையும் ஏமாற்ற அவர்கள் பயன்படுத்துகிற வாதம், 'நாலே நாட்களில் லோன் கிடைக்கும்படி செய்தவர்கள் நாங்கள் தான்' என்பது இதைவிட மட்டமான போக்கு உலகில் எங்கேயும் இருப்பதாகத் தெரியவில்லை.

நாலு நாட்களில் லோன் கிடைக்கும்படி செய்தவர்கள் இவர்களல்ல, 19—3—51-ல் நடந்த சொஸைட்டி நிர்வாகக் குழுக்கூட்டத்தில் திரு. D. P மத்தூர் தலைமையில் தான் நாலு நாட்களில் லோன் கிடைக்கும் தீர்மானம் நிறைவேறப்பட்டது.

'இதுவரை ஏழு நாட்களில் கொடுக்கப்பட்டு வந்த லோன்கள், இனிமேல் ஐந்து நாட்களுக்குள் தரப்படவேண்டும்.'

இதுதான் அந்தத் தீர்மானம், இதை நிறைவேற்றிய டைரக்டர்கள், தோழர்கள் அங்குசாமி, பரமசிவன், பத்மநாபன், ராமசாமி, சுப்பையா முதலியார், ராஜகோபாலன், ஆறுமுகம் பிள்ளை, கந்தசாமி ஆகியோர்தான்.

இவர்களில் எவரும் லேபர் யூனியனில் சேர்ந்தவர்களல்ல, ஒவ்வொருவரும் அதை எதிர்ப்பவர்கள், ஆட்களை அதிகமாக நியமிக்காமலே இதைச்செய்த பெருமை இவர்களுக்குண்டு,

சூழ் நிலையை எவ்வளவு தூரம் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பதிலேயே கவனம் செலுத்தும் கம்யூனிஸ்ட்டுகளின் பித்தலாட்டம் இதிலிருந்துதான் தொடங்குகிறது.

சபை கூடுமிடம்

சொஸைட்டியின் பொதுச் சபைக் கூட்டங்களை (General Body) நடத்துவதற்காக வழக்கமாகத் தேர்ந்தெடுக்கும் திருச்சி ஜங்ஷன் ரயில்வே இன்ஸ்டிடியூட் மிகவும் குறுகலான இடம் அந்தக் கட்டிடத்தின் மெயின் ஹால் மேடை, இருபுறமுள்ள வராந்தாக்கள் இவற்றையெல்லாம் சேர்த்துக் கட்டிடம் முழுவதும் நிறைந்து வழிவதாக இருந்தாலும் 1700 பேருக்குமேல் கூட முடியாது. சிறிய இடம் இவர்களுக்கு மிகவும் வசதியாக அமைந்துவிட்டது. பொன்மலையிலுள்ள சில தொழிலாளர்களையும், சுற்றுப் புறத்திலுள்ள சில தொழிலாளர்களையும் முன் கூட்டியே அழைத்து வந்து கட்டிடத்தை நிரப்பி விடுவார்கள். லோன் சொஸைட்டி பொதுச் சபைக் கூட்டத்தைத் தங்கள் கிளைச் சங்கங்களில் ஒன்றாகவே ஆக்கிக் காட்டுவார்கள்; லேபர் யூனியன் கொடிகளைச் சுற்றிலும் பறக்க விடுவார்கள்; கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில்சிலர் அங்கே விஜயம் செய்வார்கள்; ஒவ்வொரு 'தோழனும்'' ஒரு சர்வாதிகாரியாக மாறுவர். எதிர்த்துக் கேட்பவர்களது குரலே காதில் விழாதபடிக் கூச்சல் போட்டுக் கலவரம் செய்வார்கள்,

சொஸைட்டி விதிகளில் பங்குதாரர்களின் உரிமை

இவர்களுடைய அட்டகாசங்களுக் கிடையே, நாகரீகத்துக்கும் பண்பாட்டுக்கும் ஓரளவு இடங் கொடுத்த உபவிதி (பைலா) 53 ஒன்றுதான். கலவரம் விளைவிப்போரிடையே நல்லவர்களும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கும் உரிமையையும் வாய்ப்பையும் அந்த உபவிதி பங்குதாரர்களுக்குக்கொடுத்தது,

" ஒவ்வொரு பிரச்னையும் கைதூக்குதல் மூலமாகவே முடிவாக்கப்படும்; யாராவது ஒரு பங்குதாரர் கோரினாலும் உடனடியாக இரகசிய ஓட்டு முறை (பாலட்) எடுக்கப்பட வேண்டும்,

இதுதான் அந்த உபவிதியின் முற்பகுதி. உரத்த குரல் எழுப்ப வாய்ப்பில்லாதவர்களுக்குக் கிடைத்த மகத்தான உரிமைச் சாசனம். இந்தச் சலுகை இருப்பதால்தான் எதிர்ப்பவர்கள் வரத் துணிகிறார்கள்; அதையும் ஒழித்து விட்டால் எவரும் நம்மை ஏதும் செய்துவிட முடியாது'' என்ற காரணத்தால் இரகசிய ஓட்டுமுறை இல்லாமலே செய்துவிடத் துணிந்தனர்.

30—1—'53-ல் நடந்த விசேஷப் பொதுச் சபைக் கூட்டத்தில் விவாதத்துக்குக் கொண்டுவரப்பட்ட 14 உபவிதி (பைலா) திருத்தங்களில், 'ஒவ்வொரு பிரச்னையும் கைதூக்குதல் மூலமாகவே முடிவு செய்யப்படும்' என்பதை மட்டும் உறுதி செய்யும் திருத்தம் புகுத்தப்பட்டது.

அப்போதுதான் திருச்சி, பொன்மலையிலுள்ள பல பங்குதாரர்களுக்கு விழிப்பு ஏற்பட்டது. எதிர்ப்பவர்கள் ஒரு சிலர்தான் என்ற இறுமாப்பு எந்த அளவுக்குக் கொண்டுபோய் விட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டனர்.

லேபர் யூனியன் சார்பில் கைதூக்கி முடிவு செய்வதை ஆதரித்து ஒரு தேதியில்லாத நோட்டீஸ் வெளியிடப்பட்டது. அதில் மிகவும் முக்கியமான பகுதி.

" பார்லிமெண்ட் தேர்தல், அல்லது சட்டசபைகளின் தேர்தல்களில் நடப்பது போன்ற மிரட்டல்களும், லஞ்ச பயமும், இல்லாததாலும், வருடத்திற்கு ஒருமுறை தேர்தல் நடப்பதின் காரணத்தாலுந்தான் தொழிலாளிகள் கைதூக்கும் முறையை ஆதரிக்கிறார்களேயொழிய மற்றபடி மைனாரிட்டிக்கு இடையூறு விளைவிக்கவோ விரட்டுவதற்காகவோ அல்ல. ஆகவே கைதூக்கி ஓட்போடும் முறை முற்றிலும் மேற்கண்ட காரணங்களால் ஜனநாயமானது.''

இந்த நோட்டீசில் கையெழுத்திட்டிருப்பவர் தோழர்கள் M கல்யாணசுந்தரம் M. L. A. (தலைவர்) K, அனந்த நம்பியார் M. P. (பொதுக்காரியதரிசி) இருவருந்தான். சட்டசபை, பார்லிமெண்ட், ஜனநாயகம் ஆன இந்த மூன்று சொற்களும் இப்படி சந்தி சிரிக்கும் அளவுக்குப் பயன்படுவது கண்டு உண்மையாகவவே வருந்துகிறோம். இவைகளுக்குத் தொடர்புள்ளவர்களே இப்படி எழுதத் துணிந்திருக்கிறார்கள் என்றால் மற்றவர்கள் நிலையைப்பற்றி நாம் விளக்கத் தேவையிருக்காதென நம்புகிறோம்.

கம்யூனிஸ்ட் சூழ்ச்சி முறியடிக்கப்பட்டது

இந்தத் திருத்தத்தை எதிர்த்துத் திரண்ட பங்குதாரர்களைச் சமாளிக்கும் சக்தியில்லாததால் அதை அப்போது கைவிட்டனர். ஆனால் அடுத்த கூட்டத்தை அதற்காகவே கூட்டினர் 10—4—54ல் நடந்த விசேஷப் பொதுச் சபைக் கூட்டத்தில் விவாதிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட திருத்தம் 'கைதூக்குதல் மூலமாகவே ஒவ்வொரு பிரச்னையும் முடிவு செய்யப்படும்' என்பது மட்டுந்தான். இந்த ஒரே ஒரு திருத்தத்துக்காக ஒரு தனிப் பொதுச் சபையே கூடிற்று.

வாடிக்கையாகக் கையாளும் குழப்பம், கூச்சல் கலவரம் இவை மூன்றையும் பயன்படுத்தித் திருத்தத்தை நிறைவேற்றினர். ஆனால் கூட்டுறவு இலாக்கா இதை அனுமதிக்க மறுத்துவிட்டது

எல்லா பங்குதாரர்களும் கூடி முடிவு செய்யும் போதுதான் கைதூக்குதல் முறையைக் கடைபிடிக்க வேண்டுமே தவிர, திருச்சி பொன்மலையிலிருக்கும் சிலர் கூடிக்கொண்டு இந்த முறையைக் கையாள அனுமதிக்க முடியாது என்பதுதான் அந்த இலாக்காவின் தாக்கீது. 36,000 பங்குதாரர்களின் பிரதிநிதிகளும் இருக்கும் இடத்தில்தான் கைதூக்குதல் முறை செல்லுபடியாகும் என்ற ஆலோசனையைக் கூட்டுறவு இலாக்கா இவர்களுக்குத் தெரிவித்தது.

பிரதிநிதித்துவ சபை தோற்றம்

அதன் விளைவுதான் இவர்கள் தங்களுடைய மகத்தான சாதனை எனக்கூறிக் கொள்ளும் பிரதிநிதித்துவ சபை (Representative Assembly) கைதூக்குதல் முறைபற்றிய திருத்தம் கூட்டுறவு இலாக்காவால் அனுமதிக்கப் பட்டிருந்தால், பிரதிநிதித்துவ சபை என்ற பிரச்னையே எழுந்திருக்காது. எப்படியாவது கைதூக்குதல் முறையை மட்டும் அனுசரிக்க வழி செய்து விட வேண்டுமென்ற எண்ணத்தால தூண்டப் பட்டதால்தான் பிரதிநிதித்துவ சபையைப்பற்றியே பேசத்தொடங்கினர். ஆனால் அதிலும் ஒரு தொல்லை நோக்கி நிற்கிறது என்பதை உடனே உணர்ந்தார்கள். 1500 பேர்களை அழைத்து வந்து செய்கிற அட்டகாசம், 120 பேர்களைக் கொண்ட பிரதிநிதித்துவ சபையில் செய்ய முடியாமல் போய்விடும், தேர்ந்தெடுக்கப்படுகிற 120 பேர்களும் இவர்களுடைய ஆட்களாக இருக்க மாட்டார்கள்; 100-ல் ஒரு பங்கு கிடைத்தாலே அது அளவுக்கு மீறிக் கிடைத்த அதிர்ஷ்டம், அப்போது இவர்கள் ஆதிக்கம் அடியோடு ஒழிந்து போகும் நிலை நிச்சயமாக ஏற்படும். இந்தக் கவலையும் பயமும் அவர்களை எதிர்நோக்கின்றன,

ஜனநாயக உரிமையில்லாத பிரதிநிதித்துவசபை

சூழ்நிலையை எவ்வளவுக் கெவ்வளவு தங்கள் சூழ்ச்சிக்கும் சுயநலத்துக்கும் பயன் படுத்தலாம் என்பதைப் பற்றியே சதா சர்வகாலமும் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் இவர்களுக்கு ஒரு புதிய யோசனை பிறந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட 120 பிரதிநிதிகளும் டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்க உரிமை யற்றவர்களாக ஆக்கிவிட்டால் ஆதிக்கத்தை நிலைக்கச் செய்யலாம் என்ற அடிப்படையில் வேலை தொடங்கினர். 36,000 பங்குதாரர்களும் சேர்ந்துதான் 14 டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர்.

தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதி நிதிகளுக்கும், டைரக்டர்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது பற்றியே இவர்கள் கவலைப்படவில்லை. தங்களால் தேர்ந்தெடுக்கப்படாத டைரக்டர்களைக் கட்டுப்படுத்தவோ, கண்காணிக்கவோ, அந்த பிரதிநிதிகளால் எப்படி முடியும் ! பஞ்சாயத்து போர்டுகளில் உள்ள தலைவர்களுக்கும் அங்கத்தினர்களுக்கும் இடையே அடிக்கடி ஏற்படுகிற அதே தகராறு தானே பிரதிநிதிகளுக்கும், டைரக்டர்களுக்குமிடையே ஏற்படும்? பிரதிநிதிகளின் உரிமைகளையும், அதிகாரங்களையும் அகற்றவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது! கஷ்டப்பட்டு கடன்வாங்கி, வக்கீல் நோட்டீசுகளுக்கும் வாரண்டுகளுக்குமிடையே ஊசலாடும் ரயில்வே தொழிலாளியின் காசைப் பாழாக்க இதை விடக் கொடுமையான திட்டம் வேறென்னவாக இருக்க முடியும்!

36,000 பங்குதாரர்களுடைய தொடர்பும் யாருக்குக் கிடைக்கிறதோ அவரால்தான் டைரக்-

✱

கம்யூனிஸ்டுகளின் சூழ்ச்சியை முறியடிக்க திரண்டு வருமாறு வேண்டுகோள்.

ராக முடியும். அந்தத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியை நடத்தித்தர லேபர் யூனியனும் கம்யூனிஸ்டு கட்சியும் பாடுபடும். இவர்களுடைய ஆதரவை பெறாத எவருக்கும் டைரக்டராக யோக்கியதையே இல்லாமல் போகும் லேபர் யூனியன் ஆட்களையே டைரக்டர்களாக்கி, போக போக்ய தாருகி விசியோக உரிமைகளுடன் லேபர் சொஸைட்டியைத் தங்கள் ஆதிக்க புரியாக்கிக் கொள்ளலாம். பிரதிநிதித்துவ சபையின் உரிமையை பறித்து பங்குதாரர்களை ஏமாற்றப் பயன்படும் என்பதைத் தவிர வேறு என்ன விளையும் இதனால்!

பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது செய்ய முடியாத குழப்பத்தை டைரக்டர் தேர்தலில் பயன்படுத்திக் கொள்ளலாம், என்ற அடிப்படைக் கருத்தை உள்ளடக்கியே இந்தத் திட்டத்தை உருவாக்கினர். எதிர்த்துக் கேட்பவர்களிடம் "120 பேர்களை எளிதில் விலைக்கு வாங்கிவிட முடியும்" என்ற 'வாதத்தை" பயன் படுத்தினர். அவ்வளவு பெரிய சீமான், சொஸைட்டி பங்குதாரராக எங்கே வரப்போகிறான் என்பதே நமக்கு விளங்கவில்லை,

ஒவ்வொரு பங்குதாரருக்கும் உள்ள அடிப்படை உரிமையை நொறுக்கித் தூள் தூள்களாகிவிட்டு, வாத பிரதிவாதங்களால் சதியை மறைக்கும் மட்டரகங்களைப்பற்றி நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது: மறுபடியும் எதிர்ப்பு முன்னணி திரண்டது. திருச்சி, பொன்மலையிலுள்ள ஜனநாயகத்தில் பற்றுள்ள பங்குதாரர்கள் அனைவரும் கூடினர்.

பிரதிநிதித்துவ சபையும் 15 டைரக்டர்களும்

14—11—55 அன்று நடந்த விசேஷப் பொதுச்சபைக் கூட்டத்தில் இந்த பிரதிநிதித்துவ சபைத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

டைரக்டர்களை நீக்கவோ மாற்றவோ உரிமையில்லாத பிரதிநிதித்துவ சபைக்காக பங்குதார்களின் பணத்தைப் பாழாக்குவது பைத்தியக்காரத்தனம். தனிப்பட்ட எந்த பங்குதாரரும் டைரக்டராகும் உரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்" என்ற அடிப்படையில் எதிர்ப்பு உருவாகி இருந்தது.

ஆனால் பொதுச் சபைத் தலைவர், எதிர்ப்பவர்கள் கொடுத்தத் திருத்தத்தை அனுமதிக்க மறுத்துவிட்டார், ஒரு விசேஷப் பொதுச்சபைக் கூட்டத்தில், கொண்டு வரப்படும் எந்தத் திருத்தத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும். அல்லது அடியோடு நிராகரிக்க வேண்டுமே தவிர, திருத்தத்துக்குத் திருத்தம் கொண்டுவர விதிகள் அனுமதிக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டித் தடுத்துவிட்டனர்.

திருத்தத்தை ஆதரித்து இருவரும், எதிர்த்து இருவரும் பேசிய பிறகு, திருத்தம் ஓட்டுக்கு விடப்படவேண்டும் என்று தலைவரால் முடிவு செய்யப்பட்டு இருதரப்பாரும் ஒத்துக்கொண்டனர். எதிர்த்துப் பேசியவர்கள் பங்குதாரர்களைத் தம் வசப் படுத்திவிட்டனர் எனத் தெரிந்ததும், லேபர் யூனியன் திட்டம் தோல்வியடையும் என உணர்ந்து, எல்லோரும் பேசி முடித்த பிறகு, ஒரு டைரக்டர் எழுந்து, தான் பேசப்போவதாகத் தெரிவித்தார். தலைவர் அனுமதிக்க மறுத்தும் விடாப்பிடியாக ஒலிபெருக்கி முன் நின்று பேசத் தொடங்கினார்.

திருத்தத்தை எதிர்த்தவர்கள் அனுமதிக்க மறுத்துவிட்டனர், உடனே வழக்கமான கூச்சலும் கலவரமும் தொடங்கின. என்ன பேசப் படுகிறது என்பதை விட. யார் பேசுகிறார்கள் என்பதைக் கவனித்தே எதையும் செய்வதற்காகப் பயிற்சியளித்து அனுப்பப்பட்ட அவர்கள் கட்சிக்காரர்கள். மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் நடைபெற முடியாமல் தடுத்தனர். சமாளிக்க முடியாமல் தலைவர் கூட்டத்தை ஒத்திப்போட்டு விட்டார்.

கூட்டத்தை முடித்துவிட்டுத் தலைவர் வெளியேறியதும், பங்குதாரர்களில் பெரும்பாலோர் கலைந்து விட்டனர். பெரும்பாலோர் போனபிறகு மனந் துணிந்து பொதுச்சபை கூட்டத்தை உடனடியாக நடத்தத் தொடங்கினர் லேபர் யூனியன் டைரக்டர்கள். தீர்மானத்தை அவர்கள் சார்பில் ஆதரித்துப் பேசிய ஒருவரையே தலைவராக அந்தக் கூட்டத்துக்குத் தேர்ந்தெடுத்தனர். வாதம் புரிந்தவருக்கே தீர்ப்பு கூறும் உரிமை எப்படி இருக்கும் என்பதைப் பற்றிய கவலையே அவர்களுக்கு இல்லை. அந்தத் திருத்தத்தை அவர்கள் ஆட்களைக்கொண்டே நிறைவேற்றினர்.

நிறைவேற்றப்பட்ட திருத்தம் கூட்டுறவு இலாக்காவால் நிராகரிக்கப்பட்டது. 28-10-55ம் தேதியிட்டு கூட்டுறவு இலாக்கா டிப்டி ரிஜிஸ்ட்ரார் திரு. கேசவகினி கையெழுத்திட்ட R C. 14461/55 F, என்ற கடிதத்தில், திருத்தம் நிராகரிக்கப்பட்டது என்ற செய்தியை லேபர் சொஸைட்டி செக்ரடரிக்குத் தெரிவித்தார்கள்.

ஆனால் லேபர் யூனியன் சார்பில் 22-10-55ம் தேதி வெளியிடப்பட்ட ஒரு நோட்டீசில் திருத்தத்தை ரிஜிஸ்ட்ரார் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

"எல்லாவற்றையும் விட சிறந்த அம்சம் என்னவென்றால் நம் சங்கம் நீண்ட நாட்களாகக் கோரி வந்துள்ள ரயில்வே பூராவிலும் உள்ள சர்வ பங்குதாரர்களுக்கும் டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அடியிற் கண்டவாறு ரிஜிஸ்தரார் ஏற்றுக் கொண்டுவிட்டார்.

ரீஜன்	1	திருச்சி-பொன்மலை	6	டைரக்டர்கள்
,,	2	திருச்சி ஜில்லா	2	,,
,,	3.	மதுரை	2	,,
,,	4,	சென்னை	2	,,
,,	5.	போத்தனூர்	3	,,

அதாவது 300 பேருக்கு ஒருவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி சபையும், மேற்கண்ட சபையும், மேற்கண்டவாறு 15 டைரக்டர்களும் லயன் பூராவிலுமுள்ள சர்வ பங்குதார்களாலும் சொஸைட்டியின் சரித்திரத்தில் முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 3 வருடங்களுக்குப் பதவி வகிப்பார்கள்.

இந்த நோட்டீஸில் கையெழுத்திட்டிருப்பவர்கள் தோழர்கள் M கல்யாணசுந்தரம், M. L. A. (தலைவர்) K அனந்த நம்பியார் M P: (பொதுக் காரியதரிசி) இருவருந்தான்! எவ்வளவு நேர்மை பார்த்தீர்களா!

இந்த லட்சணத்தில் இவர்களை எதிர்த்துக் கேட்பவர்களை 'நிர்வாகத்தின் கையாட்கள்' என்று பொதுமேடைகளில் பேசுவது கண்டு எங்களுக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. "யாரையாவது சுட்டிக் காட்டி, நிர்வாகத்தில் கையாள் என்று குற்றஞ் சாட்டினால் வழக்குமன்றம் வரை போகத் தயாராக இருக்கிறோம்."

பங்குதாரர்களின் ஜனநாயக உரிமை

திரும்பத் திரும்ப பொதுச்சபைக் கூட்டங்களுக்குப் போய் தகராறுகள் செய்வதைவிட, இறுதியாக இதற்கு ஒரு முடிவுகண்டு ஜனநாயக ரீதியில் பிரதிநிதி சபை அமைக்கலாம் என்ற அடிப்படையில் ஒன்றுபட்டனர் திருச்சி பொன்மலையிலுள்ள பெரும்பாலான பங்குதாரர்கள். எல்லாப் பிரிவினரும் ஏற்றுக்கொள்ளும் விதம் ஏழு பிரதிநிதிகளைப் பொறுக்கியெடுத்தனர். அவர்களுடைய முதல் கடமை, வெற்றி பெற்றால் உடனடியாகப் பிரதிநிதி சபை அமைத்து, அதிலிருந்து டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்கும் திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதிமொழிப் பத்திரத்தில் ஒவ்வொருவருடைய கையொப்பத்தையும் வாங்கியிருக்கின்றனர்.

எம்ப்ளாயீஸ் யூனியனும் — எம்ப்ளாயீஸ் அசோஸியேஷனும், சதர்ன் ரயில்வேமென் யூனியனும்—எந்த யூனியனையும் சாராதவர்களும், தொழிலாளியும்—குமாஸ்தாவும், பங்குதாரர்கள் என்ற அளவில் ஒன்றுபட்டு தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் தான் இவர்கள். 36,000 பங்குதாரர்களின் பிரதிநிதிகளையும் இடம்பெறச் செய்யவேண்டிய பொறுப்பை நிறைவேற்றிக் கொடுக்கக் கடமைப் பட்டவர்கள்,

ஒரே யூனியன் சார்பிலே ஆட்களிருக்க வேண்டும் என்பது கூட்டுறவுச் சங்கம் என்ற சொல்லையே அவமதிப்பதாகும். மற்றவர்களுக்குத் தெரியாமல் அக்கிரமங்களைச் செய்து, அதை மூடி மறைக்கத் தான் உதவுமே தவிர, செய்யப்படும் தவறுகளை எல்லோராலும் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்காது.

ஆதரவு. எதிர்ப்பு இரண்டையும் ஒரே இடத்தில் வைத்தகல்தான் எவரும் தவறு செய்யப் பயப்படுவார்கள். இதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை. குறிப்பிட்ட சிலரிடம் அதிகாரத்தைக் குவிப்பது சர்வாதிகாரத்துக்கு அடிப்படை அமைப்பதைப் போலத்தான் ஆகும். அதனால் உருவாகும் கொடுமைகள் ஏராளம்.

நிரந்தரமாக ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாருக்கே அதிகாரமளிப்பது: எவ்வளவு மட்டமான சூதாட்டங்களை நடத்த இடங்கொடுக்கிறது. என்பதை விளக்க நம்மால் பல ஆதாரங்களைத் தர முடியும்.

எனவே யூனியன் சார்புள்ளவர்களாலும், சார்பற்றவர்களாலும் ஜனநாயக அடிப்படையில் நிறுத்திவைக்கப்பட்ட நண்பர்கள் (வாக்குச் சீட்டிலுள்ள வரிசை எண்களின்படி.)

9. கே. கே. எம். பணிக்கர், டி. டி. எஸ், ஆபீஸ், திருச்சி.
10. எம் நல்லப்பன், சீனியர் கிளார்க். எஸ்டாபிளிஷ்மெண்ட் அக்கௌண்ட்ஸ், திருச்சி.
11. பி. ஜெயராஜ், மோல்டர், டி. எஸ் டி ஈ. ஓர்க்ஷாப், திருச்சி,
12. எஸ். எம் முகம்மது ஹனீபு பவர் பிரஸ் ஆபரேடர், மெக்கானிகல், பொன்மலை.
13. டி. குழந்தைசாமி, மார்க்கர், மெக்கானிகல், பொன்மலை,
14. ஏ. தங்கவேலு பிள்ளை, ஆஸிஸ் டெண்ட் மாஸ்டர், ரயில்வே உயர்நிலைப் பள்ளி, பொன்மலை.
15. என். ராஜேந்திரன், கிளார்க், அக்கவுண்ட்ஸ் பொன்மலை.

லேபர் யூனியன் சார்பில் ஏழுபேர் டைரக்டர்கள் தேர்தலுக்காக நிறுத்தப் பட்டனர். ஏற்கனவே இருந்த ஏழு டைரக்டர்களில் ஒருவரை மட்டும் நீக்கிவிட்டு, இன்னொருவரைச் சேர்த்து பட்டியல் வெளியிட்டனர். நீக்கப்பட்ட தோழருக்கு நம்முடைய மனப்பூர்வமான அனுதாபங்கள்!

பழைய டைரக்டர்கள் என்ன தவறு செய்தார்கள் எனக் கேட்கும் நண்பர்கள், நீக்கப்பட்ட டைரக்டர் என்ன தவறு செய்தார், எதற்காக ஒதுக்கப்பட்டார் என்பதை மட்டும் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

ஜனநாயக உரிமையை பறிக்கச் சதித்திட்டம்

29-10-55ம் தேதி அன்று சொஸைட்டி தேர்தல் என அறிவிக்கப் பட்டதும் இஸ்லாமிய நண்பர்களும் திருச்சி ஜங்ஷன் குமாஸ்தாக்களும் தேர்தல் தேதியை மாற்ற வேண்டினர். (மீலாதுன் நபி) நபி நாயகம் (சல்) பிறந்தநாள் விழாவன்று தேர்தலை நடத்தாதீர், எங்களால் வரமுடியாது என இஸ்லாமியர்கள் வேண்டினர். விடுமுறை நாளில், வேறு வேலைகளைக் கவனிக்க இடங்கொடுங்கள், என ஆபீஸ் குமாஸ்தாக்கள் கேட்டுக் கொண்டனர். நூற்றுக்கணக்கான கையெழுத்துகள் கொண்ட வேண்டுகோள்கள் அனுப்பப்பட்டன.

ஒரு டைரக்டராவது தங்களை வேண்டிக் கொண்ட பங்குதாரர்களுக்குப் பதில் சொல்லவே இல்லை, தேர்தல் அதிர்ச்சி காரணமாக நோட்டீசுகளும், அறிக்கைகளும் ஆதரவுகளும் தேட முனைந்திருக்கும் எந்த டைரக்டருக்கும் அப்போது நாம் பங்குதாரர்கள் தயவில் வாழுபவர்கள் என்ற எண்ணமே பிறக்கவில்லை. வழக்கமான குழப்பம் கூச்சலைக்கொண்டே வெற்றி பெற்றுவிடலாம் என்று இறுமாந்திருந்தனர். நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டவுடன் பங்குதாரர்களை பணிவோடு வேண்டவும்; சாதித்தவைகள் என்ன என்பதை விளக்கவுமான அளவுக்கு இறங்கி வந்திருக்கின்றனர், எப்போதும் போல லேபர் யூனியனைக் கொண்டே நோட்டீசு போடாமல் தனிப்பட்டோர் வேண்டுகோள் விடும் நிலையேற்பட்டதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்தால்தான் புரியும். இன்று ஏமாந்தால் வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறிவிடும்!

பத்து பூத்துக்கள் வரை ஏற்பாடு செய்யவேண்டும் 29-10-55 அன்றைய தேர்தலுக்கு. என்று அனுப்பிய மனுக்கள் என்ன ஆயின! ஏன் ஏற்பாடு செய்ய வில்லை? லேபர் யூனியனா இந்த ஏற்பாடுகளைச் செய்யும்? நம்பியாரும், கல்யாணசுந்தரமுமா பங்குதாரர்கள் மத்தியிலே உலவும் உரிமை பெற்றவர்கள்!

குறைவான ஆட்களைத்தான் எதிர்பார்த்தோம் என்று இவர்களால் கூறமுடியாது 1953ம் ஆண்டில் சொஸைட்டி செக்ரடரி, கைதூக்குதல் முறைக்கு அனுமதி கோரி, கூட்டுறவு இலாகாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் "ஆண்டுக்கு ஆண்டு அதிகமான பங்குதாரர்கள் கலந்துகொள்கிறார்கள்" என்பதைத் தெரிவித்திருக்கிறார்.

டைரக்டராக இருந்தவர்களுக்கு இது தெரியாமலா போனது! எதெதற்கோ கூச்சல் போடும் இவர்கள், இந்த நல்ல காரியத்தைச் செய்யவும், அதற்காகப் போராடவும் ஏன் முன்வரவில்லை? பங்குதாரர்களிலே பெரும்பாலோர் கம்யூனிஸ்டுகளை எதிர்ப்பவர்கள், வோட்டுப் போடுவது என்று ஆரம்பித்தால் இவர்கள் சீட்டு கிழிந்துவிடும் என்பதைத் தவிர வேறென்ன காரணமாக இருக்க முடியும்!

28—10—55 அன்று இரவு 7மணிக்கு நிறைய ஷேர் சர்ட்டிபிகேட்டுகளை சில டைரக்டர்கள் கையில் சொஸைட்டி செக்ரடரி கொடுத்தனுப்பியதாகப் பங்குதாரர்களில் சிலர் நோட்டீசு போட்டிருக்கின்றனர், கடைசி நேரத்தில் இத்தனை ஷேர் சர்ட்டிபிகேட்டுகள் ஏன் வாங்கப்பட்டன? எப்படிப் பயன்பட்டன அந்த ஷேர் சர்டிபிகேட்டுகள் என்பது இதுவரை வெளியாகவில்லை.

29—10—55 அன்று 6000-க்கு மேற்பட்ட பங்குதாரர்கள் வந்திருந்தனர், பங்குதாரர்களாக இருப்பவர்களுக்கெல்லாம் எடுத்துச்சொல்லி அழைத்து வந்திருந்தோம். உழைப்பு, பணம், நேரம்மூன்று

நடக்க இருப்பவை

நல்லாண் பிள்ளை பெற்ருள்

செஞ்சி வட்டம் அடுத்த நல்லான் பிள்ளை பெற்ருள் தி. மு. கழகத் துவக்க விழா 3—12—55 சனி மாலை 5-30 மணிக்கு பிடாரி கோயிலுக்கடுத்த பெரியார் திடலில் நடைபெறும். ஊராண்மைக் கழகத் தலைவர் திரு, ச. வீராசாமி அவர்கள் தலைமையில் தோழர் என். வி. நடராசன் சொற்பொழி வாற்றுவார். மாலை 4-மணிக்கு ஊர்வலம்.

துரையூர் (ரெகுநாயகிபுரம்)

3—12—55 சனி மாலை 4-மணிக்கு தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெறும். அ. இராமையன் அவர்கள் தலைமையில் தோழர்கள், என். எஸ் இளங்கோ, கே. அடைக்கலம், பி. வடிவேலு, கே. எஸ் எம். கலா நேசன், கோவேர்தன் ஆகியோர் பேசுவர். தோழர் எம். கிருஷ்ணமூர்த்தி கொடியேற்றுவார்.

மாயூரம்

திரு. வி. கல்யாண சுந்தரனுர் படிப்பகத் துவக்க விழாவும், கட்டிடத் திறப்பு விழாவும் 3-12-55 சனி மாலை 6-மணிக்கு இரயிலடி அஞ்சல் நிலையத்துக் கருகில் நடைபெறும். தோழர் கே, எஸ். சவுந்தரராசன் தலைமையில் தோழர்கள், சி. பி. சிற்றரசு, என். கிட்டப்பா, வி. எ. பாண்டியன் பேசுவர். பி. டி ராசன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

அன்று காலை 9-30 மணிக்கு ஆரோக்கியநாதபுரத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் தோழர்கள். சி பி சிற்றரசு, மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார், ஆர். இராமாநுசம், எம். சி., கணபதி எம். சி., பேசுவர்.

புது வண்ணை

திருவொற்றியூர் பெரியசாலை 237-வது எண்ணுள்ள கிராஸ் ரோட் இடலில், வள்ளுவர் இளைஞர் மன்ற சார்பில் 3-12-55 சனி மாலை 6-மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ., தலைமையில் பேராசிரியர் அன்பழகன், கவிஞர் கண்ணதாசன், சுரதா பேசுவர்.

மதுரை

கல்லக்குடி நடராசன் நினைவுப் படிப்பக இரண்டாவது ஆண்டு விழா 4—12—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு சிந்தாமணி ரோடில் நடைபெறும். தோழர் அ. குருசாமி அவர்கள் தலைமையில் சிற்றுளி சுப்ரமணியம், எஸ். முத்து. திண்டுக்கல் சமதர்மம், பி கே. சேதுராமன், என். எஸ். இராசா, கே. எஸ். சந்தானம் பேசுவர்.

தோழர். ஈ. வெ. கி. சம்பத் வேண்டுகோள்

அன்புள்ள தோழர்களே, டில்லி நகரில் நடைபெறும் சர்வதேசத் தொழிற் கண்காட்சியைக் காணவும். வடநாட்டில் ஏற்பட்டுள்ள நீர்ப்பாசன, தொழில் அபிவிருத்திகளைக் கண்டறியவும், எனது துணைவியாருடன் காரில் செல்லுகிறேன்.

திரும்ப ஒருமாத காலமாகும் என எண்ணுகிறேன். எனவே அதுவரை நிகழ்ச்சிகளுக்கு ஒத்துக்கொள்ளுமாறு பணித்துக் கடிதங்கள் எழுதாமல் இருக்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்,

தங்களன்புள்ள ஈ: வே, கி சம்பத்

தென் இந்திய......தொடர்ச்சி

விளைவு துதான் மிச்சமேதவிர உருவான பலன் ஏற்படவில்லை. இரவு 7மணி ஆகியும் அடையாளச் சீட்டுகள் கூடக் கிடைக்காமல் திண்டாடினர் பல பங்குதாரர்கள்.

ஒரே ஒரு பூத் மட்டும் வைத்திருந்தனர். அவர்கள் கணக்குப்படி ஒரு மணி நேரத்தில் 500 பேரால்தான் வோட்டுப் போட முடிந்தது. 6000 பேரும் ஓட்டுப்போட எவ்வளவு நேரமாகும் என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள்.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே அங்கேயிருந்த ஒரு டைரக்டருக்காவது பங்குதாரர்களின் அவதியைப் போக்க மனம் வரவில்லை. எப்படியாவது அந்தக் கூட்டம் கலைந்து விட்டால் அவர்களுடைய ஆட்களை மட்டும் தேக்கி நிறுத்திக்கொண்டு வெற்றி பெற்று விடலாம் என்ற கருத்தின் அடிப்படையில் காத்திருந்தனர்.

வந்திருந்த எவரும் அசைவதாகத் தெரியவில்லை. அன்றைய நிகழ்ச்சியின் தலைவர் திரு. ஷாகுல் ஹமீது இரவு 7-15 மணிக்கு வெளியே வந்து பார்த்த போதுதான் உண்மை நிலையை உணர்ந்தார்; தேர்தல் நாள் குறிப்பிடும் வரை ஒத்திப்போட்டார். எல்லோரும் கலைந்த பிறகு, 14-5-56 அன்றைய கூட்டத்தைப் போல நடத்தி விடுவாரோ என்ற சந்தேகத்தால் அதை எழுதி வாங்கிக் கொண்டோம். ஒரு M. L. A வும் M. P. யும் எதிலும் கையெழுத்துப் போடத் தயாராக இருக்கும்போது எதைத்தான் துணிந்து செய்யமாட்டார்கள்.

டிசம்பர் 4-ம் தேதி ஓட்டுரிமை

4—12—'55 ஞாயிற்றுக்கிழமையன்று அந்தத் தேர்தலை நடத்தப் போகிறார்களாம். காலை 9-மணியிலிருந்து 1 மணிவரையிலும் மாலை 2 மணியிலிருந்து 6 மணி வரையிலும் தேர்தல் நடக்கும் எனத் தெரிவித்திருக்கிருர்கள்.

இந்தத்தடவை அவர்கள் இடையூறு விளைவிக்க முடியாதபடி முன்கூட்டியே ஏற்பாடுகளைப் பற்றிய வேலைகளில் ஈடுபட்டிருக்கிறோம். வழக்கு மன்றம் ஏறியாவது எத்தர்களின் பித்தலாட்டங்களைத் தவிடு பொடி யாக்குவோம் என உறுதி கூறுகிறோம்.

9 லிருந்து 15 அவைதான் நம்முடைய நண்பர்களின் வரிசை எண்கள் K. K. M. பணிக்கரிலே தொடங்கி N. ராஜேந்திரன் முடிய இருக்கும் ஏழு பேருக்கும் வோட்டுப் போடுங்கள் என வேண்டுகிறோம். ஒருவர் ஏழு பேருக்கு ஓட்டுப் போடலாம்.

இன்றே உங்கள் ஷேர் சர்ட்டிபிகேட்டுகளை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இல்லாதவர்கள் உடனே வாங்கிக் கொள்ளுங்கள். எவரிடமும் ஷேர் சர்ட்டிபிகேட்டைக் கொடுத்து விடாதீர்கள். ஷேர் சர்ட்டிபிகேட்டைக் காண்பித்தால்தான் வோட்டுப் போட அனுமதிப்பார்கள்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரையும் ஆதரவு தர வேண்டுகிறோம்.

●

பி. பாலசுப்ரமண்யம்

கடந்த 50-நாட்களாக சென்னைப் பொது மருத்துவ (ஜெனரல் ஆஸ்பிடல்) விடுதியில் பிரத்யேக வகுப்பில் சிகிச்சை பெற்று வரும் "சண்டே அப்சர்வர்" ஆசிரியர் பி, பாலசுப்ரமண்யம் அவர்களின் உடல் நிலை குணமாகி வருகிறது. எனினும் இன்னும் 15 நாட்கள் தொடர்ந்து மருத்துவ விடுதியிலிருந்தே சிகிச்சை பெற வேண்டுமென மருத்துவ நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

கே. கே. நீலமேகம்

தி. மு. கழக செற்குழு உறுப்பினர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் கடந்த 10-நாட்களாக சென்னை பொது மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்று 30-11-55 அன்று மருத்துவ விடுதியிலிருந்து விலகி, 1-12-55 அன்று இரவு குடந்தைக்குப் புறப்பட்டுச் சென்றுர்.

பகுத்தறிவு

★

ஒவ்வோர் ஆங்கில மாதம் முதல் நாளில் வெளிவந்து கொண்டிருக்கும் "பகுத்தறிவு" இதழின் டிசம்பர் வெளியீடு, இம்மாதம் 10-ம் நாளில் வெளிவரும் என்பதை "பகுத்தறி" வின் கையொப்பதாரர்கள், விற்பனையாளர்கள், வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம் என நிர்வாகி அறிவிக்கிருர்.

வ, ஆ. மாவட்ட தி. மு கழகப் பிரதிநிதிகளுக்கு

4—12—'55 அன்று பிற்பகல் 2-மணிக்கு வேலூர் நகர மண்டபத்தில் மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும், அவ்வமயம் பொதுக் குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறும். மாநில மாநாட்டிற்கு நிதியளிக்காத கிளைக் கழகப் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் கிளைக் கழகத்தின் பங்கையும் பிரதிநிதிக் கட்டணம் செலுத்த வேண்டுகிறேன், பிரதிநிதித் தோழர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வர வேண்டுகிறேன். என்று வ ஆ மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தே மூர் முல்லை சத்தி கேட்டுக்கொள்ளுகிருர்.

முதல் பக்கத் தொடர்ச்சி . . .

செல்லுவது ரத்து செய்யப்பட்டதாம்!

எனவே, சோவியத் தலைவர்கள் தமது குழுவினருடன் 29-11-'55 அன்று காலையே தமிழகத்திலிருந்து புறப்பட்டு வங்கம் சென்றனர். போகிற போக்கில், அத்தலைவர்கள், நமது மாநில முதலமைச்சருக்கு கிராமபோன் ஒன்றையும் இசைத் தட்டுகளையும் பரிசாக அளித்தனராம்! அவர்கள் எந்த எண்ணத்தோடு இதை அளித்திருப்பினும் இன்றுள்ள இந்திய அரசியல் சட்டப்படி மாநில முதலமைச்சர்கள் "கிராமபோன் ரிகார்ட்" போல வடநாட்டு ஆதிக்கக் கோஷ்டியின் பல்லவியை பிரதி பலிக்க வேண்டியவர்களாயிருக்கிருர்கள் என்பதை சோவியத் பிரதமரின் பரிசு சித்தரித்துக் காட்டுகிறதல்லவா!

அதுபோலவே—நமது மாநில கவர்னர் பிரகாசா அவர்கள் தற்போதுள்ள அரசியல் சட்டப்படி கவர்னருக்கு பொறுப்பான பணி ஒன்றுமில்லையாதலால் ஓயாது பேசிப் பேசிப் பழகிப் போன என்னுல் சும்மாயிருக்க முடியவில்லை. எனவே எந்த நிகழ்ச்சியாயிருப்பினும் என்னை அழையுங்கள், வந்துபேசுகிறேன்' என்று சில நாட்களுக்கு முன் கூறினுரல்லவா!

கவர்னர் ஓயாது பேசிக்கொண்டிருந்தால் நேற்றுபேசியதுஎன்ன என்பது தெரியாமல் அதற்கு நேர் மாருக அடுத்துப் பேசினுல் கேலியாகல்லவோ முடியும்! எனவே அவர் தமது பேச்சினை ஒலிப் பதிவு செய்து கொண்டு அதற்கேற்ப தமது ஆசையை இனிது நிறைவேற்றிக் கொள்ளத் துணையாயிருக்கட்டும் என்று எண்ணி, சோவியத் பிரதமர், நமது மாநில கவர்னருக்கு ஒலிப்பதிவு செய்யும் கருவியைப் பரிசாக அளித்திருக்கிருர் போலும்!

ஆக—இந்தப்பரிசுகளை வழங்கி விட்டு, வங்கம் சென்றனர்—சோவியத் தலைவர்கள்!

மாணவர் மன்றம் சென்னை

திரு. வி. க. நினைவுப் பரிசுப் போட்டிகள்

கல்லூரி-பேச்சுப் போட்டி

கல்லூரி வகுப்பு மாணவர்க்கு மாணவர் மன்றச் சார்பில் 11-12-'55 அன்று நடைபெற விருந்த திரு வி. க. பேச்சுப் போட்டி, பல கல்லூரிகளில் தேர்வு சமயமாக இருப்பதால்-பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க—ஜனவரி மாதம் முதல் வாரம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் நாள், நேரம் முதலியன பின்னர் அறிவிக்கப்படும்,

பிறப்பு

சென்னை 19-வது வட்ட தி. மு. க. செயலாளர் டி. நடராசன் அவர்களின் துணைவியார் திருவாட்டி D. தேவதா அம்மையாருக்கு 28-11-55 திங்கட்கிழமை விடியற் காலையில் பெண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம் இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று வரப் பெற்ருேம்—நன்றி—நிர்வாகி,

தென்னுடும் . . . தொடர்ச்சி

யில் அருமையான வளர்ச்சியைக் கண்டார்கள். இன்றைய தினம் மேல் நாட்டினர்கூட அதை ஒப்புக்கொள்கிருர்கள். மூந்நூறு ஆண்டுகட்கு முன் கள்ளிக் கோட்டையில் - (காலிக்கட்டில்) நெய்யப்பட்டு வந்த ஒருவகை முரட்டுத் துணிக்கு காலிகோத் துணி என்று பெயரிட்டு அதைப் பல துறைகளுக்குப் பயன் படுத்திஞர்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வனையப்பெற்றசட்டி, பானைகள் இன்றும் அழியாமல் ஆதிச்சநல்லூர் முதலிய பகுதிகளில் கிடைக்கின்றன. இஞ்ஜினீயர் அதிகச்சம்பளம்வாங்குகிருன். அவன் கீழே இருப்பவன் குறைந்த சம்பளம் வாங்குகிருன். ஆனுல் உழைப்பவன் இவன் தான்; மதிப்பு அவனுக்கு!

தென்னவர்க்கு — தமிழர்க்கு இது ஒவ்வாதது, தமிழன் நெறி,

"பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் [சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்பது. தொழில் வளர்ச்சிக்கொவ்வாத சாதி, மத பேதங்களைப் பற்றி அவர்கள் கவலை கொள்ள வில்லை.

இன்றைய நாகரிக உலகம் ஓரளவு பண்பட்டிருந்தாலும், நம்முடைய ஆற்றலிலே நம்மவர்க்கு நம்பிக்கை இல்லை. தொழில் விற்பன்னர்களை வெளிநாட்டிலிருந்து அழைத்து வருகிருர்கள் கடைசியில் பார்த்தால் நமக்கெவ்வளவு தெரியுமோ அவ்வளவு தான் அவருக்கும் தெரியும். ஆனுல் அவர் வெளி நாட்டிலிருந்து வந்தவர். நாமும் அவர்களுக்கு மேல் சிறந்த ஆற்றலைப் பெற வேண்டும். நாம் முழு வெற்றியை இன்றில்லா விட்டாலும் சில காலத்திற்குப் பின்னுவது பெற்றே தீரவேண்டும். நம்நாட்டுப் பொருள்களை வாங்க நம்மவர்கள் தயங்குகிருர்கள். அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் நம்முடைய ஆற்றல் வளரவேண்டும். தமிழ் நாட்டைத் தழைக்க வைக்க நீங்கள் முயல வேண்டும். அதற்கு ஆர்வத் துணையோடு அறிவுத் துணையையும் கொண்டு தென்னுட்டுத் தொழில் வளத்தை மேம்படுத்துவீர்களாக!

திரட்டியவர் : ஜி பக்தவத்சலம்

பாலைவன ரோஜா!

14

காட்சி—31

இடம்—திகம்பரர் மாளிகை.

நிலைமை [புத்தகமும் கையுமாக ராஜம் கட்டிலிலே சாய்ந்திருக்கிறாள். வெளியிலிருந்து வந்த திகம்பரர் அறைக்குள்ளே அடி எடுத்து வைக்கிறார்.]

திகம்பரர் : ராஜம் !

ராஜம் : அப்பா !

[எழுந்து நிற்கிறாள். உட்காரும்படி கை யசைத்துக் கொண்டே திகம்பரரும் கட்டிலிலே உட்காருகிறார்.]

தி : உன் திருமண விஷயமாக ஒரு முடிவுக்கு வந்து விட்டேனம்மா !

ரா : பழைய முடிவுதானேயப்பா...!

தி : இல்லை! புதிய முடிவு...... தாமரைக் குளத்திலே உனக்கு மணமகன் தேடி இருக்கிறேன். கௌரவமான குடும்பம். உன் வாழ்வைத் தொடரப் போகிறவன் நல்லவன் — மூர்த்தியைப் போல ஊதாரி அல்ல !

ரா : — மூர்த்தி ஊதாரியா ? அப்பா புரியவில்லையே நீங்கள் கூறுவது !

தி: புரியாதகாரணத்தால்தான் ராஜம்...நீ அந்த வேஷக்காரனை உன் வாழ்வைத் தேய்க்கும் மோசக்காரனை உத்தமனென்று நம்பி விட்டாய். அவன் சிந்தும் புன்னகைக் குள்ளே புலி ஒளிந்து கொண்டிருப்பதை நீ அறிய மாட்டாய் !

ரா : அப்பா யாராவது கூறிய கட்டு கதையை நம்பி.........

தி : கட்டிவிடுகின்ற கதைகளை நம்பி விடுபவனல்ல நான். நேரிலேயே பார்த்தேன் நேற்றிரவு... நீ துணைவனென்று நம்பியிருந்தாயே அந்த துரோகி மூர்த்தி ஆற்றோரத்திலே நாட்டியக் காரியின் மையலிலே சிக்கி யிருந்ததை நானே பார்த்தேன். அவனும்—அவளும் பேசிய அன்புப் பேச்சுகளையும் கேட்கத்தான் செய்தேன். பெண்களை மயக்குவதிலே அந்தக் கசடன் கைதேர்ந்தவனென்பதை நன்றாகப் புரிந்து கொண்டேன் !

ரா : [விம்மலுக்கும் விக்கலுக்கு மிடையே] அப்பா......

தி : அழாதே ராஜம்! சாயம் பூசப்பட்ட இந்த உலகிலே உண்மை நிறம் தெரியாமலே போய் விடுகிறது. சந்தர்ப்பம் சதி செய்து விடவில்லை நமக்கு. சாகக்காரனைப் பற்றிப் புரிந்து கொண்டோம். ராஜம்...வஞ்சக வேடன் வீசிய வலையிலிருந்து நீ தப்பிவிட்டாயம்மா. இனி அந்த மூர்க்கனை மறந்து எதிர்காலத்தை எண்ணிப்பார்.

ரா : எதிர் காலம் இருண்டு விட்டதேயப்பா

தி : எதிர் காலம் இருளவில்லை -நீதான் இருண்ட குகையிலிருந்து தப்பிக் கொண்டாயம்மா. தாமரைக்குளம் சம்மந்தத்துக்கு உன் சம்மதந்தான் தேவை. யோசித்துச்சொல்லம்மா நான் வருகிறேன்.

*

காட்சி—32

இடம்—திகம்பரர் மாளிகையின் தோட்டப்பகுதி

நிலைமை (ராஜம் உலவிக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு அனுதாபங் காட்டுவது போல பூஞ்செடிகள் ஆடாமல் அசையாமல் தலையைத் தொங்கப் போட்டிருக்கின்றன. கோகிலம் வருகிறாள்.)

கோ : ராஜம்!

ரா : கோகிலா...எங்கிருந்தோ எப்படியோ புயல் உருவாகிறதென்று கூறினேனே...

கோகி : அந்த சூதுப் புயல் நமது இரும்புக் கோட்டையை அசைத்து விடாதென்றுதானே நானும் கூறினேன்.

ரா : நீயும் கூறினாய் - நானும் நம்பத்தான் செய்தேன்...ஆனால் எதிர்பாராத புயலைவிட பயங்கரமான பூகம்பமே ஏற்பட்டு விட்டது இப்போது!

கோ : பூகம்பமா?

ரா : ஆமாம்— புது நெருப்பு என் வாழ்வை சுற்றிக்கொண்டது மூர்த்திக்கும் யாரோ நாட்டியக் காரிக்கும் தொடர்பாம். இதை அப்பாவே நேரில் கண்டதாகவும் கூறினார். மூர்த்தி மோசக்காரரென்பதை அப்பாவே தீர்மானித்து விட்டார்.

கோ : நீயும் அப்படி நம்பு கிறாயா?

ரா : நான் எதை நம்புவது—நம்பாமலிருப்பது...... என்னைத்தான் கிணற்றுத் தவளையாக்கி விட்டார்களே ! கோகிலம்! வாழ்வு பயங்கரக் கனவாகி விட்டது. மின்னுகின்ற நட்சத்திரங்களைப் பறித்து மடியிலே கட்டிக் கொள்ள நினைத்தேன்...... அது பகற் கனவு-கேலிக்கூத்து யென்பதை இப்போதுதான் உணருகிறேன், ஆசை விசித்திரமானதுதான்.

கோ : ராஜம்—ஊர் பேசுவது அத்தனையுமே உண்மையென்று நம்பி விடாதே! ரசம்போன கண்ணாடியிலே — முகம் தெரியாது. கண்ணாடியின் குற்றமல்ல அது—பார்ப்பவனுக்குத் தான் தெளிவு வேண்டும். உன் தந்தை எதை ஆதாரமாக வைத்துச் சொன்னாரோ தெரியவில்லை ... எதற்கும் நானே மூர்த்தியிடம் போய் உண்மையைத் தெரிந்து வருகிறேன், பலவேஷமும், வீரனும் பயங்கரமான திட்டத்தோடு நடமாடுகிறார்கள். இந்த நேரம் பார்த்து மூர்த்தி மீது சந்தேகம் கிளப்பப் பட்டிருக்கிறது. இதை உடனே தெளிவாக்கிக் கொள்ளா விட்டால் நிலைமை ஆபத்தானாலும் ஆகிவிடும். கலங்காதே—கண்ணீர் விடாதே...உண்மை நம் பக்க மிருக்கிறது. போய் வரட்டுமா?

ரா : போய் வா ! மூர்த்தியை சந்திக்கும் போது...என் நிலையை எடுத்துச் சொல்—கட்டுப்பாட்டுக் கம்பிகளுக்குள்ளே நான் சிறை வைக்கப்பட்டிருப்பதையும்...

மா. தங்கவேலர்

அவரைக் காணாமல், பேசாமல் துடிதுடிப்பதாயுங் கூறு, நாட்டியக்காரியின் தொடர்பைப் பற்றி பக்குவமாகக் கேட்டுத் தெரிந்து கொள். அப்பப்பா அந்தத் தொடர்பு வதந்தியாகவே இருந்து விட்டால்...!

*

காட்சி—33

இடம்— ஆற்றோரம்.

நிலைமை (காத்திருக்கிறான் மூர்த்தி. கோகிலம் நகர்ந்து வருகிறாள். கோகிலத்தைப் பார்த்ததும் வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறான் மூர்த்தி. அவனுக்குப் பின்னே வந்து நின்ற கோகிலம்)

கோ : உங்களைக் காணுவதற்காகத்தான் வந்தேன்,

மூ : (திடுக்கிட்டுத் திரும்பி) என்னைக் காணுவதற்காக—என்னிடம் என்ன சொல்லப்போகிறாய்?

கோ : ராஜத்தின் விஷயமாகத்தான்...

மூர்த்தி : (அலட்சியமாகச் சிரித்து) ராஜம்...!... அந்த ஊர் வேசியைப் பற்றிப் பேசவாப் போகிறாய் !

கோ : கடுமையான சொல் !

மூ: கொடுமைக்கு ஆளானவன் நான் என்னிடம் இனி நீங்கள் அதைத்தான் எதிர்பார்க்க முடியும்,

கோ : நல்ல அன்பும், இதயமும் செத்துப் போகவில்லை ராஜத்திடம். போலி சூழ்நிலையை நம்பி பொன் னோவியத்தை — பொற்கிளியைத் தவிக்க வைக்கிறீர்கள்,

மூ : அந்த பொற்கிளி வைரக் கூண்டிலேயே அடைபட்டு நாசமொழி பேசிப் பழகட்டும் !

கோ : கண்டதெல்லாம் உண்மையல்ல நாங்கள் கேள்விப்பட்டு வதையும் அப்படித்தான் நம்பவில்லை. உண்மை எப்போதுமே கண்ணுக்குத் தெரிந்து விடுவதில்லை—சுலபத்தில் !

மூ : கண்டது உண்மையல்ல. 'நாங்கள் கேள்விப்படுவதும் பொய்' ஏய் ! கோகிலா ! யாரிடம் கதை அளக்கிறாய். நான் கண்டதெல்லாம் உண்மையைத் தான். நீங்கள் கேள்விப்படுகிறீர்களே அதுவும் பொய்யல்ல! கருத்திழந்த கபோதியை சுலபத்திலே ஏமாற்றி விடலாம். ஆனால் நான் விழித்துக் கொண்டவன் மீண்டும் ஒரு சாகச வலை விரிக்கப்பட்டால் அது தூள் தூளாகிவிடும்.

கோ : மன்னித்துக் கொள்ளுங்கள்—மீண்டும் கூறுகிறேன் ராஜம் களங்கமற்ற முழுமதி!

மூ : நான் அரை மதியனல்ல!

கோ : அந்தச் செந்தாமரைக்கு நீங்கள்தானே வாழ்வளிக்க வேண்டும்,

மூ : எத்தனையோ எருமைகள் மிதித்துக்கசக்கிய அந்தச் செந்தாமரைக்கா நான் வாழ்வளிக்க வேண்டும்.

கோ : ராஜத்தின் மானத்தை-அவமானத்தால் தீய்த்துவிட எண்ணங் கொண்டு விட்டீர்கள். அது தவறான எண்ணம். இதை எடுத்துக்காட்டவும்—ராஜத்தின் வேதனையை வெளியிட்டுப் போகவுந்தான் வந்தேன்.

மூ : தூது சொல்ல வந்த பைங்கிளி நீ வந்த இடத்துக்கே திரும்பப் பறந்துபோ. உன் தோழியின் தோள்களைத் தொத்திக் கொண்டே சொல்...... உன்னால் ஏமாற்றப்பட்ட மூர்த்தி — புது உலகிலே வாழப்போகிறான் என்பதை மட்டும்! ஆமாம் நான் இனி போக வேண்டிய பாதையே வேறு...!

(மூர்த்தி புறப்படுகிறான்)

கோ: ஒரே வார்த்தை, கேட்டுப் போங்கள்.

மூ : இனி நான் கோளாக் காதன்!

(வேகமாக நடை போடுகிறான்)

[அடுத்தவாரம்]

திருச்செங்கோட்டில் அண்ணா

21-11-55 திங்களன்று திருச்செங்கோடு தி. மு. க. சார்பில் கைலாசம் பாளையத்தில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் தில்லை வில்லாளன் பேசிய பின் அறிஞர் அண்ணா அவர்கள் விரிவுரை யாற்றினார். அண்ணாவுக்கு தி மு கழக கிளைகளின் சார்பாகவும், தனிப்பட்ட தோழர்களாலும், படிப்பகங்கள், தொழில் ஸ்தாபனங்கள் சார்பாகவும் எண்ணற்ற மலர் மாலைகளும், கைத்தறி துண்டுகளும், வேட்டிகளும் போர்த்தப் பட்டன. திருச்செங்கோடு, சட்டையம் புதூர் தி. மு. க. கிளைகளின் சார்பில் அண்ணாவுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. தோழர் என். கே. பி. வேல் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது. கூட்ட நிகழ்ச்சிகளை சேலம் சாமி போட்டோ ஸ்டுடியோ உரிமையாளர் படம் எடுத்தார்கள். கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் அளித்த மாநில மாநாட்டு நிதி பின் வருமாறு:—

திருச்செங்கோடு தி. மு. க. ரூ.	121—0—0
சட்டையம்புதூர் ,,	35-11—0
பள்ளிபாளையம் ,,	8—0—0
கந்தம்பாளையம் அனுதாபிகள்	11-11—3
வெள்ளியம்பாளையம் வி. எ. அலீம் & நண்பர்கள்	5—0—0
திருச்செங்கோடு ஸ்வர்ணாம்பிகை பஸ் ஊழியர்கள்	3—0—0
திருச்செங்கோடு தோழர் டி. என். எஸ். நரசு	1—0—0
ஆகமொத்த... ரூ.	185—6—3

செய்திகள்

பம்பாய்

அந்தேரி தி. மு. க.

15—11—55 செவ்வாய் மாலை 3 மணிக்கு அந்தேரி தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் கோல்டுங்கரி பணிமனையில் தோழர் எல். எம், பாண்டியன் அவர்கள் கூட்டத்தைத் துவக்கிவைத்து பேசினர்,

தலைவர் விளக்க உறைக்குப் பின் பம்பாய்க்கு வரும் கவிஞர். கண்ணதாசன் அவர்களைக் கொண்டு இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை நடத்துவதென்று ஏகமனதாக முடிவு செய்யப் பட்டது. இறுதியாக தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

*

மாதுங்கா தி. மு. க.

14—11—55ம் நாள் பிற்பகல் 3–மணிக்கு மாதங்கா தி. மு. க. செயற் குழு கூட்டம் T–15, 18-A. 161–ம் நெம்பர் இல்லத்தில் அன்புச் ;செழியன் தலைமையில் தே. சா. நாதன் அவர்களின் திராவிடப்பண்ணுடன் ஆரம்பமாகியது,

திரு. பெ, வரதராசன் அவர்கள் சென்ற கூட்ட நிகழ்ச்சி, வரவு செலவு, கணக்கு, கடிதப்போக்கு வரத்து ஆகியவைகளைப் படித்துக் காண்பிக்க ஒப்புக் கொள்ளப்பட்டன.

தோழர்கள் ஜோதி நாயகம். பிச்சையா, வரதராசன். நடராசன் பாண்டியன், ஆகியோர் சொற்பொழி வாற்றிய பின் கழக 2–ம் ஆண்டு விழாவை டிசம்பர் முதல் வாரத்தில் நடத்துவது எனவும் அவ் விழாவிற்கு, தொ. து. அன்புச் செழியன் தலைவராகவும், தே, சா. நாதன் வரவேற்பாளராகவும், யோ, தர்மராசன் கொடியேற்றுபவராகவும், சி, எஸ், எஸ். பிச்சையா. கவிஞர் கண்ணதாசன் ஆகியோர்கள் சொற்பொழி வாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

பேராசிரியர் இருதயராஜ அவர்களின் மறைவு குறித்து, அநுதாபம் தீர்மானம் நிறேவேற்றிய பின் தோழர் பிச்சையா, நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

*

அண்ணா சொற்பயிற்சி மன்றம் பாண்டுப்

21-11-55 அன்று. இரவு 8-மணிக்கு தோழர். மா. மோ. டேவிட் அவர்கள் தலைமையில் "அண்ணா சொற்பயிற்சி மன்றம்" துவக்க விழா நடைபெற்றது தோழர்கள் சேதுராமன், மா. ஈ. சாக் நம்பி நாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்:

ஆமதாபாத்

ஆமதாபாத் தி: மு: கழக உறுப்பினர்கள் கூட்டம், தோழர். கலைமணி அவர்கள் இல்லத்தில் 16–11–55 காலை 10-மணிக்கு நகர செயலாளர் தலைமையில் கூடி கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேறின,

பேராசிரியர் ஏ. இருதயராசு அவர்கள் மாரடைப்பால் இயற்கை எய்தியமைக்கு இக்கூட்டம் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்து தனது அநுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை, 43-வது வட்ட தி மு. கழகம்

23–11-55 புதன் இரவு சென்னை, 43-வது வட்ட தி. மு. கழகத்தின் செயற்குழு கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர் தோழர் பார்த்தசாரதி அவர்களுடைய தந்தையாரின் மறைவுக்கு ஆழ்ந்தஅநுதாபம் தெரிவிக்கப்பட்டது. 23–10–55ல்நடைபெற்றபொதுக்கூட்ட வரவுசெலவு கணக்கும் 17-8–55 முதல் 16-11-55 வரை கிளைக்கழகத்தின் வரவு செலவு கணக்கும் ஆய்வு செய்யப் பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் முடிவுற்றது.

திருவெண்காடு தி. மு, க.

7–11–55 அன்று மாலை 6–மணிக்கு, தோழர் சி. கேசவன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். கிட்டப்பா, கே. எஸ். சௌந்தரராசன், சி. ஜம்பு, ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், தி. மு. க. பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு மடல் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பொதுச் செயலாளர் அவர்கள் வரவேற்புக்கு நன்றி செலுத்தியும்—கழகக் கொள்கையை விளக்கியும் சொற்பொழி வாற்றினர். மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 21. அளிக்கப்பட்டது.

மாயூரம் நகர தி. மு. க.

மாயூரம் நகர தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் 20—11—55 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆசிரியர் வேலாயுத மன்றக் கட்டிடத்தில் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது.

அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொதுச் செயலாளர் வரவேற்புக் கூட்ட வரவு ரூ. 196—0—0 மேற்படி கூட்ட, ஊர்வலச் செலவு ரூ. 195–9-6

மாயூரம் நகர தி, மு. கழகத்திற்கு சொந்த இடம் வாங்க விரைவில் நிதி நாடகம் நடத்துவது.

மாயூரம்

ஆரோக்கிய நாதபுரம் திரு. வி. க. படிப்பகத்தின் செயற்குழுக் கூட்டம் 19—11—55 சனி காலை தோழர் எஸ். எஸ். நாதன் தலைமையில் நடைபெற்றது. படிப்பகக் கட்டிடத் திறப்பு விழாவை தோழர் சி. பி. சிற்றரசு, இராமாமிர்தத்தமையார் ஆகியோரைக் கொண்டு 3—12—55 அன்று நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் வேலாயுத மன்றம்,

ஆசிரியர் வேலாயுத மன்ற கமிட்டி கட்டிட நிதிக்குழுக்கூட்டம் 19–11–55 சனி மாலை 6-மணிக்கு மன்ற கட்டிடத்தில் தோழர் சி. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதுவரையில் வசூலான நிதி ரூ. 423—0—0 மீதித் தொகையை ஜனவரி மாத இறுதிக்குள் வசூல் செய்து கட்டிட உரிமையாளருக்கு செலுத்தி விடுவது.

வசூல் செய்வதற்காக ரசீது புத்தகங்கள் பெற்றுச் சென்றிருக்கும் தோழர்கள் இதுவரையில் தொகையையும் ரசீது புத்தகத்தையும் வரும் 10-12-55 தேதிக்குள் கமிட்டிக்கு சேர்த்துவிட வேண்டும்.

செயலாளர் என், கிட்டப்பா நன்றி நவில கூட்டம் முடிவுற்றது,

குடியேற்றம் தி. மு. கழகம்

27–11–55 மாலை 6-மணிக்கு தி. மு. கழக சார்பில்–குடியேற்றம் ஆற்றில் தோழர் தி. சு. சுப்பிரமணியம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ரெங்கசாமி. மு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசியபின், டி. கே. தாமரைச் செல்வன் அவர்கள் கழக கொள்கையினை விளக்கியும்—தற்கால அரசியல் நிலையினையும் மாற்றுக் கட்சிகளின் போக்கினையும் குறித்து பேசினர்.

அன்பழகன் சொற்பயிற்சி மன்றம்

மதுரை ஆட்டுமந்தை பொட்டல் சந்தில் மீன் மார்க்கட் சமீபம் உள்ள அறிவு வளர்ச்சி படிப்பகத்தின் "அன்பழகன்" சொற்பயிற்சி மன்றத்தின் 2வது ஆண்டில் முதலாவது கூட்டம். 23—11—55ந்தேதி பொருளாளர் எஸ். பி. எஸ். அமீது தலைமையில் நடைபெற்றது "உலக வரலாற்றில் நாம்" என்ற பொருள் பற்றி தோழர்கள் கே. ஆர். அனிபா., ஏ. எஸ். கலைநேசன், கபீர் மற்றும் பலர் பேசினர்கள். இறுதியில் தலைவர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

அறிவு வளர்ச்சி படிப்பகம்

மதுரை நகர் திராவிட முன்னேற்றக் கழக உட்கிளையான "அறிவு வளர்ச்சி படிப்பகத்தின்" உறுப்பினர்கள் கூட்டம் 19—11—55 இரவு 10 மணிக்கு செயலாளர் கே. ஆர். அனிபா தலைமையில் நடைபெற்றது. கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

படிப்பகத்தின் வரவு-செலவு சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

திண்டுக்கல் எம். எஸ். பி. சோலை, திருச்சி பேராசிரியர் இருதயராஜ் ஆகியோர் இயற்கை யெய்தியமைக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

மதுரை 4–வது வார்டில் மூடப்பட்டு கிடக்கும் குளிக்கும் அறைகளை செப்பனிட்டு வார்டு மக்களுக்கு பயன்படும்படி ஏற்பாடு செய்ய நகர சபையை கேட்டுக் கொள்கின்றது:

தேவிகுளம், பீர்மேடு தாலூகாக்களை தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென சென்னை, மத்திய அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றது.

மதுரை தி. மா. மு. கழகம்

மதுரை தி. மா. மு. கழக 4ம் ஆண்டு துவக்க விழா 12—11—55 அன்று மாலை அண்ணா திடலில் தோழர் இளமாறன் தலைமையில் நடைபெற்றது. தோழர். சுந்தரம் கழக ஆண்டறிக்கையை வாசித்த பின், தோழர்கள் கி. மனோகரன், எஸ். முத்து, ப நெடுமாறன். மா. பாண்டியன். கு. கிருட்டிணன். தேனிநாதன், சொக்கலிங்கம் ஆகியோர் பேசினர். பேராசிரியர் இருதயராஜ அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தென்றல் நாடக மன்றம் துவக்க விழா

20–11-55 அன்று மாலை 3–மணிக்கு சிராமபுரம் எர்ரப்பா பகுதியில் (பெங்களூர்) "தென்றல் நாடக மன்றம்" நாடகாசிரியர். திரு. ப. செல்வராசன் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது,

நாடக மன்றங்கள் இயங்கவேண்டிய முறை குறித்து ப. செல்வராசன் விரிவுரை யாற்றினர். தோழர். ஆர். விசயரங்கம் தலைவராகவும். தோழர். செல்வநாதன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டபின் விழா இனிது முடிவுற்றது,

உடனே தேவை

திராவிடன் இதழ் விற்பனையாளராக

முன் பணம் கட்டக் கூடியவர்கள், கீழ்க்கண்ட இடங்களுக்கு உடனே தேவை.

காஞ்சீபுரம் வாணியம்பாடி
ஆம்பூர் திருப்பத்தூர்
சிதம்பரம்

விவரங்களுக்கு :

'திராவிடன்' சென்னை1

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி; கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்;

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103–1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

எங்கும் விற்பனையாளர்கள் தேவை

மனதிற்கு மகிழ்ச்சி யூட்டுவது

'அரசு' சுகந்த' பாக்குத் தூள்

ம. சு. ராசன்
அரசு பாக்குத் தூள் தயாரிப்பவர்
பழனி ரோடு, திண்டுக்கல்

M. S. RAJAN
Arasu Betel Nut Manufacturer
Palani Road DINDIGUL

சிறுகதை

புதைந்த புதையல்!

சென்ற வாரத் தொடர்ச்சி

மறுநாள்; ஒருபெரிய கூடாரம் அடிக்கப்பட்டது. புதைபொருள் ஆராய்ச்சி குழுவினர் தலைமையில் பலருக்கு புதையல் தோண்டும் வேலை கிடைத்தது. அந்த இடத்தில் பகலென்றும் இரவென்றும் பாராமல் மண்வெட்டிகளும், தோண்டும் கருவிகளின் ஒலியும் ஓயாமல் ஒழியாமல் கேட்க ஆரம்பித்தன. செங்கற்கள் எடுத்த வண்ணமாக இருந்தும்குறையவில்லை. மூவருக்கும் அயர்வும்—சலிப்பு—ஆர்வம் அத்தனையும் கலந்திருந்தது. கடைசியில் அது பழைய செங்கற் சூளை என்பதை அறிந்தவுடன் அவர்கள் அடைந்த சலிப்பு......

ப்ளேக் சலிக்காமல்...அவர்களை பத்தடி தள்ளி தோண்டச் சொல்லுகிறார். உழைப்பாளர்களின் சலியாத உரத்துக் காய்த்துப்போன கைகள் மீண்டும் தோண்டுகின்றன. கலீர் என மண்வெட்டி கருங்கல்லில் மோதிய ஒலி மூவருக்கும் ..நம்பிக்கை தந்தது. வேலையாட்களை துரிதப்படுத்த மெல்ல ஒரு கோவிலின் கோபுரம் தட்டுப்பட்டது. வேலையாட்கள் ஏதோ உற்சாகத்தோடு பாடிக்கொண்டு தோண்டினர். கோபுரத்தின் அடிமுகம்—கோவில் வாசல்... கோவில் படிகள்...மொஹஞ்சோதாரோ...வின் ஒரு பகுதிபோல் காட்சியளித்தது மூவரும் கோவிலுக்குள் கையின் விளக்குகளோடு நுழைந்தனர். காலத்தால் உளுத்துப்போன அந்த கோவில் கதவுகள் விலக்கப்பட்டன. உள்ளே சில அழகிய சிலைகள். ஒரு கடவுள் உருவம்!

வேறு குறிப்பிடத்தக்க பொருள்கள் ஏதும் அங்கில்லை. ஆராய்ச்சியாளர்களின் குறுகுறுப்பான கண்கள் நிலைத்து நொந்தது. புகையைப் பிடித்துக் கொண்டிருந்த பிளேக் அருகில் உயர்ந்து நின்ற தோண்டப்படாத ஒரு இடத்தை விரலால் தட்டிய வண்ணம் சிந்தித்துக் கொண்டிருந்தவர் வேலையாட்களை அந்த பகுதியை தோண்ட ஆணையிட்டார். இரண்டடி தோண்டுவதற்குள் ஒரு பெரிய தாழி ஒன்று தென்பட்டது. தாழி (பழங்காலத்து மண் சவப்பெட்டி) சிதையா வண்ணம் மெல்ல கீழே எடுத்து வைக்கப்பட்டது.

மூவரும் விழித்த கண் இமையாமல் அதனையே உற்று நோக்கினர். நான்கடி உயரமுள்ள இரண்டடி விட்டமுள்ள பெரிய தாழி. பிளேக் மெல்ல தன் கைத் தடியால் தட்டினார் தாழியில் ஒரு பெரிய கீறல் நேராக விழுந்தது. மெல்ல அதைப் பிரித்தனர் உள்ளே ஒரு எலும்புக்கூடு உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்தது. அருகில் ஒரு சிறு தாளி மண் கலந்த பிண வாடை வீசியது சிறு தாளியும் திறக்கப்பட்டது. உள்ளே ஓலைச் சுவடிகள் ஒழுங்காக அருகில் மனித எலும்புக் கூட்டின் சில பகுதிகள் நீட்டிக் கொண்டிருந்தன. அவை மெல்ல வெளியே எடுக்கப்பட்டன. மூவரும் அங்கு வேறு எதுவும் புதையல் இருக்க முடியாதென முடிவுகட்டி ஓலைச் சுவடிகளையும், தாளிகளையும், அந்த எலும்புக் கூட்டையும் எடுத்துச்சென்றனர்.

ஓலைச் சுவடிகளைப்பற்றி ஆராய்ச்சி ஆரம்பமாயிற்று, மொழி ஆராய்ச்சிக் குழுவினர் அந்த ஓலைகளை ஆராய்ந்தனர். ஒடிந்துபோகும் நிலையில் காய்ந்துபோன அந்த 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்த ஓலைகளை ஆராய்ந்து. எடுத்து எழுதிய வண்ணமிருந்தனர்.

ஆம்...அந்த எலும்புக்கூடு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு தசையாலும் நரம்பாலும் தோலாலும் பிணைக்கப்பட்டு ரத்த ஓட்டம் நிறைந்த புலவன் அவன் பெயர் தெரியாது—நிறைந்து வழிந்தோடும் தேனன்ன தமிழ்மொழியில் கவிபாடும் புலவன் இயற்கை அன்னையின் எழிலோவியம் அவன்.

ஆண்டவனையும், அரசனையும், பரிசில் தருவோனையும் பாடி வளர்ந்து வாழ்ந்த புலவர் கூட்டத்தவனல்ல வயிற்றுக்காக நொண்டியை மீடு நடையான் என்றும், நொள்ளைக்கண்ணனை தாமரைக் கண்ணனென்றும் பாடத் தெரியாதவன்; புதுமை பேசிய பழங்காலத்து கவி அவன், இயற்கையின் விநோத ஜாலங்களைப்பாடி புதுமை பல பொழிந்து பழமையறுத்த புரட்சிப் புலவன் அவன்.

செய்தித் தாள்களும், கற்றோரும் புதை பொருள் ஆராய்ச்சிக் குழுவை பிரமாதமாக பாராட்டினர். புலவரின் கவிகள் அச்சாகி வெளிவந்தன. எங்கு திரும்பினாலும் அதே பேச்சு, புலவரின் திரு உருவத்தை கற்பனையாக வரைந்து திறப்பு விழா கூட நடத்தி விட்டனர்; அந்த வாரம் புலவரின் கடிதமொன்று வில்லியம் அவர்களின் முயற்சியால் பிரசுரிக்கப்பட்டது.

''ஆன்றோரே! சான்றோரே! அறிவுள்ளோரே! இந்த ஓலையை எழுதும் போது என் கையிலுள்ள எழுத்தாணி நடுங்குகிறது; என் மனைவி பூங்குழலியின் உதவியால் தான் உட்கார்ந்து கொண்டு எழுதுகிறேன். ஏன், நாடு கடத்தப்பட்டு கஞ்சி கூட இல்லாமல் இந்த இடிந்துபோன கோவிலின் அருகில் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறேன். வயிற்றுக்காக பாடிவாழ—புலமையை வாழவைக்கும் கருவியாக நான் ஆக்கிக் கொள்ள விரும்பவில்லை அழிந்துபோகும் இந்தஜீவன் அழியாத சிருஷ்டி ஒன்றைசெய்து வைக்கத் தான் முயன்றேன். பழமையோடு கலந்து போகாத என் புதுமையை மதிப்பார் எவருமில்லை அவர்கள் மதிக்காததற்காக நான் வருந்தவில்லை. அறியாமை புதுமையை அழிக்க முயல்கிறது. என் புதுமையை அந்த அறியாமைத் தீ எரிக்கப் பார்க்கிறது.

ஆனால் அவை என் புதுமை இலக்கியத்தை அணுவளவும் தீண்டமுடியாது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இந்த அழிந்துபோகும் உடலை வேண்டுமானால் அவைகள் வாட்டலாம். இதோ என் அருகில் அமர்ந்து கண்ணீர்வடித்த வண்ணம் தாலியுடன் நெற்றியில் மஞ்சள் குங்குமமுடன் மரணத்தை அணைக்க வேண்டும் எனக் கனவு கண்ட என் மனைவி. இலக்கியத்திற்காக வெறும் நெற்றியுடன் என்னைத் தொடர காத்து நின்று உதவி புரிகிறாள். அவளும் பட்டினிதான். நான் புனைந்தவைகளை எல்லாம் அவள் தான் தாளியில் இட்டு மூடுகிறாள். அவள் முகத்திலே வழியும் வேதனையைக் காவியமாகத் தீட்டினால் அதுவே ஒருஉயர்ந்த சிருஷ்டியாகிவிடும் கை நடுங்க குலை கொதிக்க என்னால் ஒன்றும் எழுத முடியாது.

ஏதோ நான் இறந்தவுடன் என்னை இந்த தாழியில் என் ஓலைகள் வைத்த தாளியுடன் புதைக்கும்படி சொன்னேன். அவள் எவ்வளவு வேதனைப்படுவாள் நான் இறந்த பிறகு அவள் படப்போகும் வேதனையை என் கற்பனைக் கண்ணால் பார்க்க முடிகிறது. ஆம்நான் தாழிக்குள் நிம்மதியாக உறங்குவேன் அவள் என்னைப் புதைத்த சிறிது நேரத்தில் என் பாதையில் வருவாள். ஆம் அவளும் செத்துக்கொண்டுதான் இருக்கிறாள். ஆனால் அவள் பிணச்சதையை காக்கையும் கழுகும் கொத்தித்தின்னும் நரியும் ஓநாயும் குடல்களைப் பிய்த்திழுத்து ஊளையிட்ட வண்ணம் உண்ணும், செத்துப்போய்விட்ட சடலத்தை எது எப்படித் தின்றாலென்ன, உங்கள் புகழ்ச்சிக்கோ இகழ்ச்சிக்கோ நான் என் இலக்கியங்களை விட்டுச் செல்லவில்லை இலக்கியத்தாயின் காலடிகளில் விட்டுச் செல்லும் காணிக்கை காலம் மாறும் கருத்துகள் மாறும் புதுமை மலரும் என்ற அசையாத நம்பிக்கையால்தான் இவைகளை விட்டுச்செல்லுகிறேன். நீங்கள் தோண்டியெடுக்கும் காலத்திற்கு என் கருத்துகள் பொருந்தாமலிருந்தால் மீண்டும் அந்த தாழியிலேயேப் போட்டு புதைத்துவிடுங்கள், காலம்... வரும் ஆனால் ஒன்று என் இலக்கியத்தில் தயவு செய்து எந்தவித மாறுதல்களையும் செய்யாதீர்கள் நான் ஆய்ந்து கண்ட முடிவைத்தான் புனைந்தேனே தவிர அரைகுறை அறிவால் புனைந்தவை அல்ல. இனி என்னால் ஒன்றும் புனைய முடியாது...அவள்...ஆம் அயர்ந்துவிட்டாள் என்னைத் தூக்கி அவள் தாளியில் வைக்கமுடியாது எப்படியோ எனக்காக நாங்களிருவரும் குழிதோண்டி விட்டோம். அதனால் அந்த தொல்லை தற்போது இல்லை,

ம...நான் மடலை முடித்துக்கொள்கிறேன். பாவம் பூங்குழலி ஏற்கனவே பசியால் அயர்ந்து எனக்காக, இலக்கியத்திற்காக உயிரைவைத்துக்கொண்டு நடமாடும் நடைப்பிணம் இறந்து கனத்துப்போன என் உடலை தூக்கி வைக்க முடியாது. நான்விடைபெற்றுக் கொள்கிறேன்; நான் தாளியில் உட்கார்ந்து கொள்ளவேண்டும், இன்னும் சிலவினாடிகள்தான் இந்தஇதயம் வேலை செய்யும்.—தங்கள் புதுமைப் புலவன்.

பிரசுரிக்கப்பட்ட அந்த கடிதத்துடன் உள்ளே நுழைந்தார் பிளேக் சோமநாதர் மொழி ஆராய்ச்சிக் குழு தலைவருடன் பேசிக்கொண்டிருந்தார்.

'மிஸ்டர்' சோமநாத்...வஞ்சிமா நகரத்தின் தலைநகரம் கொச்சியிலுள்ள திருவஞ்சிகளம் தானே' என ஆங்கிலத்தில் கேட்டார் பிளேக்.

'இல்லை ஹிஸ்டாரிக்கல்பிளண்டர்... திருபசி மாவட்டத்தில் உள்ள கரூர் தான் பழைய கருவூர்...அதற்கு இலக்கியத்தில் நிறைய காரணமிருக்கு! என்றார்

'ஏன் அப்படி'என விழித்த வண்ணம் கேட்டார்' பிளேக்.

சோமநாதர் மெல்ல சிரித்துக்கொண்டே 'கொச்சிதிவான் சரித்திரம் எழுதச் சொன்னார். அதிகாரம் பெற்ற அந்த சரித்திர ஆசிரியர் ஏனோ அப்படிப்பட்ட பொய்க்கு சில ஆதாரம் காட்டி எழுதி விட்டுப் போய்விட்டார் அங்கிகரிக்கப்பட்ட வரலாற்றும் அது ஒரு பொய்' பிளேக் தம் அறைக்குச்சென்று ஏதோ நூல்களைப் புரட்டிக்கொண்டிருந்தார்.

'தமிழய்யா' என ஆரம்பித்தார் சோமநாதர் 'பாருங்க எல்லா காவியங்களுக்கும் கடவுள் வாழ்த்த முதல்ல சேருங்க புரட்சிகரமா இருக்க வார்த்தைய இலக்கணப் பிழையெல்லாம் மாத்துங்க...ம்...முடியல்லேனா வேற செய்யுளை நுழைச்சிடுங்க' உரையாடலுக்கிடையே பிளேக் நுழைந்தார், ஆங்கிலேயராக இருப்பினும் அவருக்கு தமிழ் நன்கு தெரியும்,

'ஏன் ரிப்பேர் பண்றீங்க அப்படியே இருக்கட்டுமே' எனச் சிரித்துக்கொண்டே ஆங்கிலத்தில் பேசினார் பிளேக்,

'அப்படியே, போடறதா...ம்...அவ்வளவு நாஸ்திகம் ஏதோ நல்ல இலக்கிய வளமிருக்கு அதனால்தான்...தவிர அப்படியே பிரசுரிச்சா நம்ம ஆராய்ச்சியை யாரு பாராட்ட மாட்டாங்காசா. தவிர நம்மளை இப்படி நாஸ்திகம் பரவ உதவி செய்ய முடியுமா?"

பிளேக் வெறுப்பு கலந்த ஒரு உதட்டுச் சுளிவுடன் நின்றார்.

பல ஊர்களினின்று பலர் அந்த புதையல் தோண்டப் பெற்ற வள்ளியூருக்குவந்துகண்டு சென்றனர். நானும் சென்றேன். மண் சுவற்றில் பெரிய துவாரமொன்றிருந்தது. அங்கிருந்து தான் தாளியை எடுத்ததாகச் சொல்லிக் கொண்டனர். எனக்கு ஏனோ வேதனையாக இருந்தது.

வேகமாக வெளியே சென்று பூத்திருந்த காட்டு மலர்கள் சிலவற்றைப் பரித்துவந்து அந்த துவாரத்தில் எட்டி வைத்தேன். என் விழிகளில் என்னயறியாமல் நீர் வழிந்தோடியது. பேசாமல் அந்த இடிந்த கோவிலின் ஒரு புரத்தில் அமர்ந்து கொண்டேன் எனக்கு கோபமாக வந்தது ''பைத்தியக்கார புலவன் நீ நீ தான். இறக்கப்போகும் நிலையை உணர்ந்தாயே உன்னை மதிக்காத இந்த கூட்டத்திற்கு உன் பெயரைக் கூட சொல்லாமல் உன் இலக்கியத்தை ஏன் விட்டுச் சென்றாய்.'

வேதனையுடன் ஊர் வந்து சேர்ந்ததும் சேராததுமாக நான் புனைந்த இலக்கியங்கள் அத்தனையும் தீயிட்டு கொளுத்தினேன். எதற்காக நான் என் இலக்கியத்தை இவர்களுக்கு விட்டுச் செல்ல வேண்டும். விட்டு வைத்துவிட்டுப்போன புலவன் இலக்கியத்திற்கு இவர்கள் தந்த மதிப்பென்ன உலக இலக்கியங்கள் உயர்ந்து நிற்கும் போது அதைக்கண்டு இலக்கிய வறுமைபட்ட தமிழ்நாடு அலறி அழட்டும் கொன்றுவிட்ட இலக்கிய கலைஞர்களுக்காக உண்மையாக ஒரு தடவையாவது அழட்டும்,' என் தலைமையாளர் தமிழய்யாவின் குரல் கெட்டுத் சிந்தனை கலைந்து அலுவலகத்தில் இருப்பதை உணர்ந்தேன்.

'என்னப்பா கடவுள் வாழ்த்து எழுதினியா!

''ஐயா தயவு செஞ்சு மன்னிக்கனும் இந்த இலக்கிய விபசாரம் செய்ய எனக்கு பிடிக்கல.

'அப்ப நீ போகலாம். ஒரு ரெஸிக்நேஷன் லெட்டர் எழுதி வச்சுட்டு போ'

'தாராளமா பிழைக்கனுமன்ற காரணத்துக்காக அந்த செத்துப்போன புலவனுடைய புதையலை இப்படி பண்றது தமிழ் இலக்கியத்துக்கு பண்ற துரோகம் சார்'

'ஷட் அப்... கெட் அவுட்'

'தாங்ஸ் சார்' முட்டாள் புலவன் புதையல் கிடைத்தது. ஆனால் அவர்களுக்கு புதையல் கிடைத்தது.! என்னையறியாமல் என் வாய் முனகியது.

புதையலை எடுத்து புலமையை புதைத்துவிட்டார்கள். அந்தஉண்மைப் புதையலை யார் காணப் போகிறார்கள், பொருளாசையால் புதையல் தோண்டி பிணம் விழ, இலக்கிய ஓலைகளை கண்டெடுத்து அவைகளை இப்படி பத்து போடும் தமிழ் நாட்டுக்கும் இலக்கியத்திற்கும் தொடர்பு ஏற்பட்டதானால் அது உலக அதிசயம்!

எடுத்த புதையலை மீண்டும் புதைத்து விட்டார்கள். புதையல் புதைந்து விட்டது.

...அது புதைந்த புதையல்!

நெல்லை. பி. காசி விசுவலிங்கம்

மாயூரம் திருவள்ளுவர் படிப்பகம்

- 6-11-55 அன்று படிப்பக செயற் குழு கூட்டம் தோழர் கெ. சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

படிப்பக வரவு செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு — செயற் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தோழர் இராசன் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

தென்னாடும் தொழில்வளமும்

பேராசிரியர் க. அன்பழகன் சொற்பொழிவு

(22-11-'55 அன்று சென்னை சென்ட்ரல் பாலி டெக்னிக்கில் ஆற்றிய சொற்பொழிவு:—

○

பல்வகைத் தொழில் பயிற் கல்லூரியின் இத்தமிழ் மன்றம் பெரும் பாடுபட்டுக் கூட்டப்பட்டதென அறிந்தேன். முதலில் என்னை தேசத் தொண்டர் வ. உ. சிதம்பரனார் நினைவு நாளிற் பேசுமாறு வேண்டினார்கள். "சரி" என்று ஒப்புக் கொண்டேன். பிறகு "அதுவேண்டாம்; எங்கள் தொழிற்துறை பற்றியே ஏதேனும் பேசுங்கள்" என்றார்கள். நன்றாகப் பாடுகிறவனைப்போய் கொஞ்சம் ஆடச் சொன்னால், அவனை நாம் இரசிப்பதற்குப் பதில் வெறுப்போம். உங்களுடைய தொழிற் துறையைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது, மொழித் துறையில் உள்ள என்னைத் தொழிற் துறைக்கு இழுத்துவரப் பார்க்கிறீர்கள். நாங்கள் மொழித் துறையோடு, பொறி இயலைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற முறையில், எங்களைப் போலவே பொறி இயலைப் பயில்வோருக்கும் மொழித் துறைக்குத் தொடர்பு இருக்க வேண்டும், பொறி இயல் தமிழில் இதுவரை வராதது ஒரு பெருங் குறையேயாகும்.

உலக அறிவியலின் பயனாய் வளர்ந்து வரும் தொழில் வளத்தினை தமிழிலே உணர்த்த இதுவரை யாரும் முன் வரவில்லை. பாரதியார் வாழ்ந்த காலத்திலும் இப்படியேதான் இருந்து வந்தது. அவர் பார்த்தார். மேற்குத் திசையில் பல கலைகளும் மெத்த வளருவது அவர் கண்ணிற் பட்டது. அதைப் போல பல கலைகளையும் நந் தமிழில் நாம் வாழும் பொருட்டு சேர்க்க வேண்டும் என்று அவர் அவாவினார். அதற்காகச் "சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" என்று ஆணையிட்டார். இன்று தமிழகத்துத் தொழில் வளமெல்லாம் முடங்கிக் கிடக்கிறது. ஆழ் கடலிலுள்ள முத்து போல, பெருமலைப்பட்ட இரும்பு போல, அரைக்கப்படாத சந்தனக் கட்டை போல அவை நுகரப்படாத வளங்களாகி மங்கியுள்ளன.

தமிழர்கள் பழங் காலத்தில் பண் பட்டவர்களாய் விளங்கினார்கள். இன்றைக்கு மணிக்கு அறுபது மைல் வேகத்தில் ஓடும் பஸ் சக்கரத்தின் அடிப்படை உண்மையைத் தென்னவன் மிகப் பழங் காலத்திலேயே அறிந்து கொண்டிருந்தான். தேருக்குச் சக்கரத்தை வைத்துச் சுழல வைக்கும் கட்டுக்கோப்பை அவன் கண்டான். அந்தக் காலத்தில் உப்பிலிருந்து பல பண்டங்கள் சகடங்களில் ஏற்றிச் செல்லப்பட்டன. இதை யெல்லாம் நோக்கும் போது, இன்றுள்ள மக்கள் தாமாக ஏதும் புதிதாகக் கண்டு பிடித்து விடவில்லை என்பது தெரியவரும்.

அந்தக் காலத்து கோட்டைகள் எவ்வளவு உயரமாய் அமைக்கப் பட்டுள்ளன! ஏதோ, கோயில் என்ற எண்ணத்தில் கட்டியிருந்தாலும் கூட எவ்வளவு பெரிய கற்களை இயல்பாக மேலே எடுத்துச்சென்று அமைத்துள்ளார்கள் என்பதை நோக்கும் போது—தமிழர்களின் 'கட்டிடக்கலை நுண்மாண் நுழைபுலம்' புலனாகும், சிலப்பதிகாரமும், புறநானூறும் சில போர் மதில்களை வருணிக்கின்றன. அங்கு சில பொறிகள் கற்களை வாரிவாரி எதிர்களின் மீது வீசுமாம்! இரும்பை எண்ணெய்போல உருக்கி அவர்களின் மீது சொரியுமாம்! எண்ணெயையே காய்ச்சிக் காய்ச்சி அவர்களின் மீது ஊற்றும் பெரிய பெரிய கொப்பரைகளும் அங்கிருந்தனவாம். கற்களையும், கணைகளையும் தொடுக்கும் பல்வேறு 'கருவிகள் பதித்த கோட்டைகள் சிறந்த அரண்களாய் விளங்கின.

இத்தகு தொழிற் துறையில் நாம் தமிழைக் கைவிட்டோம். கைத்தொழிலின் சிறப்பினை புலவர்கள் பலவாறாக வர்ணித்துள்ளார்கள். நெசவு முதலிய கைத் தொழில்கள் இன்று வளரவில்லை. அந்தக் காலத்தில் மெல்லிய ஆடை ஒன்றைத் துவைத்து பசும்புற் தரையில் பரப்பிக் காயப் போட்டார்கள். புல் மேய்ந்து கொண்டே வந்த ஒரு பசு இதனையும் புல்லென்று எண்ணி தின்றுவிட்டதாம். பாலாவி போன்ற அவ்வளவு மெல்லிய ஆடையாம் அது! ஒரு மோதிரத்திற்குள் ஒரு புடவையையே அடக்கினார்கள். இதையெல்லாம் பார்க்கும் போது தமிழர்களின் செல்வச் சிறப்பு, செழிப்பு இவற்றையாரும் மறுக்க முடியாது!

அன்று அனைத்திலும் தமிழர்கள் தங்கள் கைத்திறனைக் காட்டினார்கள் கைவளையிலிருந்து அவர்கள் வேலைப்பாட்டை அனைத்திலும் காணலாம். இன்று போல ஒருகுறிப்பிட்ட இடத்தில் பெரிய ஆலைகள் நிறுவி அவர்கள் தொழில் புரியவில்லை. ஆங்காங்கே யிருந்து தங்கள் தொழிற் திறத்தைச் சிறிது சிறிதாக வளர்த்தார்கள். இன்று ஒரே நாளில் ஒரு வேட்டியைப் போல பல வேட்டிகள் நெய்கிறார்கள். அன்று ஒரு நாளைக்கெல்லாம் ஒரு வேட்டிதான் நெய்தார்கள். ஆனால் ஒவ்வொரு வேட்டியும் புதிது புதிதான முறையில் அமைத்து, அதில் வேலை நுட்பங்களைக் காட்டினார்கள்.

மக்கள் தொகை பெருகப் பெருகத் தேவைகளும் பெருகலாயின. எனவே அவசரத்தோடு பல பொருள்கள் செய்ய வேண்டுவதாயிற்று. எனவே நுட்பங்கள் மறையலாயின. மேலை நாட்டினரும் நம் நாட்டு மக்களைப்போல வெறும் உழவுத்தொழில் புரிவோரோயிருந்தால் கட்டாயமாக அவர்களும் விஞ்ஞானத்தில் முன்னேறியிருக்க முடியாது நீராவியைக் கண்டு பிடித்திராவிட்டால், இன்றைய தொழிற் துறையிலும் மேலை நாட்டினர் நம்முடைய உழவையே அடிப்படையாகக் கொண்டிருப்பார்கள், அதுவுமன்றியும், அவர்களுடைய் தட்பவெப்ப நிலையும் அவர்களை ஆடம்பரமான உடைகள் உடுக்கச் செய்தது.

இங்கு அரசனே செல்வத்தின் காவலன், மற்றவர்களெல்லாம், 'உண்பதுநாழி; உடுப்பது நான்கு முழம்' என்று வாழ்ந்தார்கள். அரசன் கட்டளையிட்டால் போர்க் களத்திற்குச் செல்வார்கள். கவசம் முதலிய போர்உடைகளை அரசனே அளித்துவிடுவான்; வேல், வில், வாள்முதலிய படைக்கலன்களை கொத்தன் வடித்துத் தருவான். போர் புரிந்து திரும்பியதும் அந்த கவசம் முதலியவற்றை அரசனிடம் ஒப்படைத்து விட்டு, பழுதுற்ற படைக்கலன்களை உலைக்களனில் வீசி எறிந்து விட்டு பழையபடி ஏர், கலப்பை ஏந்தி தொழில் புரிவார்கள். எனவே இங்கு முயற்சி புதிய புதிய பொருள்களைக் கண்டுபிடிப்பதில் வளரவில்லை.

அதுவுமன்றி வேறொரு கருத்தும் இடைக் காலத்தில் நம்மிடையே வந்து புகுந்தது. "என்னதான் தேடினாலும் என்ன பயன்? எல்லாம் சிற்றின்பம்; மாயை!" 'காயமே இது பொய்யடா, காற்றடைந்த பையடா' என்ற கொள்கை வந்தது. வாழ வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலே புதிய முயற்சிகள் தோன்றும், மக்களிடையே இரட்டை மனப்பாங்கு வளரும்போது தொழில் எப்படி வளரும்?

இந்தக் காலத்தில் கைத்தொழிலில் இருக்கும் நம்பிக்கையும் குறைந்து வருகிறது. கைத்தறி ஆடைகளைத் துவைத்துக் கட்டினாலும்நன்றாக உழைக்கும். அதை உணராமல் அதனை அடிக்கடி வெளுக்கப் போட்டுக் கொண்டேயிருந்தால் அது கிழிந்துவிடும். வெள்ளாவியைத் தாங்கக் கூடிய பக்குவத்தில் நூல்கள் இல்லை. அறியாமல், "கைத்தறி ஆடை வாங்குங்கள்" என்றதும் "அது கிழிந்துபோய் விடுமே!" என்கிறார்கள் பலபேர்.

குழப்பமான சூழலிலும் தொழில் வளராது. வட நாட்டில் எப்பொழுது பார்த்தாலும் ஓயாத குழப்பம். எனவே அங்கு தொழில் வளமே யில்லை. வட நாட்டிலிருந்து பிரிந்து தனித்தியங்கும் காஷ்மீர், நேபாளத்தில் மூட்டும் கைத் தொழில்கள் ஓரளவு ஓங்கி யிருக்கிறது. வட நாட்டில் எப்பொழுது பார்த்தாலும் போரும், புகைச்சலுமாய் இருந்தது. அந்த வகையில் தமில் நாட்டில் — பொதுவாகத் தென்னாட்டில் நிலைத்த வாழ்க்கை இருந்தது. தனி மனிதன் வாழ்க்கை அமைதியாகக் கழிந்தது. எனவே தொழிற் துறை

(8-ம் பக்கம் பார்க்க)

இலங்கை மட்டக்களிப்பு தமிழ் வாலிபர் சங்கத்தில் தென்றல் ஆசிரியர் கவிஞர் கண்ணதாசன் சொற்பொழி வாற்றுகிறார்,

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோழு அச்சகம், 16/99, அம்மன் கோயில் தெரு, சென்னை-1